ஒன்றே குலம்
ஒருவனே தேவன்

என்றே விளக்கிடும்...

வேலைக்காரி

மார்ச் 19 முதல் சென்னை பாரகன், லக்ஷ்மியில்

தினசரி 3 காக்ஷிகள்

மற்றும் தமிழ் நாட்டின் இதர முக்கிய இடங்களிலும்
வெற்றிகரமாக நடைபெறுகிறது

30-3-49 முதல் ஆந்திராவின் முக்கிய நகரங்களில் ஆரம்பம்

விரைவில் வருகிறது

மதுரை	....	சென்டிரல்
தஞ்சாவூர்	....	டவர்
திருநெல்வேலி	....	பாபுலர்

JUPITER PICTURES CIRCUIT

ஜூபிடர் தயாரிப்பு

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 35

என்ன சேதி?

ஆஸ்தான கவிஞர்களை வாழ்த்துகிறோம்!

இந்தியா தேசம் சுதந்திரம்பெற்றது! சென்னை மாகாணம் சுயாட்சி அடைந்தது! அன்னிய ஆட்சி தொலைந்தது! தன்னரசாட்சி எழுந்தது!—இதையெல்லாம் நம்முடைய காலத்தில் கண்ணாரக் கண்டோம். ஆயினும் சில சமயம் சந்தேகம் உண்டாகிவிடுகிறது. 'பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து உண்மையாகவே விடுதலையடைந்து விட்டோமா என்று ஐயமுறுகிறோம். இனிமேல் அத்தகைய ஐயம் சென்னை மாகாண மக்களுக்கு வேண்டியதில்லை. "நாம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்பதில் சந்தேகம் உதிக்கும் போதெல்லாம், "சேவகா! நம் ஆஸ்தான கவிஞர்களைக் கூப்பிடு!" என்று ஆக்ஞாபிக்கலாம். ஆஸ்தான கவிஞர்கள் வருவார்கள். பாஷைக்கு ஒரு கவிஞர் வீதம் வருவார்கள். தமிழில் ஒரு பாடல் சொல்வார்கள்; தெலுங்கில் ஒரு பத்தியம் சொல்வார்கள்; மலையாளத்திலும் கன்னடத்திலும் கவி சொல்வார்கள்; சமஸ்கிருதத்தில் சுலோகம் சொல்லுவார்கள். சொல்லி நம்முடைய சந்தேகங்களைப் போக்குவார்கள்! "நாம் எல்லாரும் இந் நாட்டு மன்னரேதான்!" என்ற உறுதியை நமக்குத் தருவார்கள்.

சென்ற பத்து வருஷ காலத்தில் பல துறைகளில் சென்னை மாகாணம் முந்திக் கொண்டு பிற மாகாணங்களுக்கு வழி காட்டியாக இருந்து வருகிறது. அந்தப் புகழை மேலும் நிலைநிறுத்தக் கூடிய காரியத்தைச் சென்னை சர்க்கார் சென்ற வாரத்தில் செய்திருக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் வழங்கும் முக்கிய பாஷை ஒவ்வொன்றுக்கும் அத்துடன் பாரத நாட்டின் ஆதி மொழியான சமஸ்கிருத பாஷைக்கும் சென்னை சர்க்கார் ஆஸ்தான கவிஞர்களை நியமித்திருக்கிறார்கள். விவரம் வருமாறு:-

1. நாமக்கல் ஸ்ரீ வி. ராமலிங்கம் பிள்ளை—தமிழ்; 2. ஸ்ரீ செல்ல பில்லா வேங்கட சாஸ்திரி—தெலுங்கு; 3. ஸ்ரீ வள்ளத்தோல் நாராயண மேனன்—மலையாளம்; 4. மகாமகோபாத்யாய ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் — சமஸ்கிருதம்; 5. ஸ்ரீ கோவிந்தபாய்—கன்னடம்.



நாமக்கல் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை

இவ்விதம் ஆஸ்தான கவிஞர்கள் நியமிக்கப் போகும் யோசனையை 1947-ம் வருஷம் செப்டம்பர் 11-ந் தேதி எட்டயபுரத்தில் பாரதி மண்டபத் திறப்பு விழா நடந்தபோது பிரதமர் கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் வெளியிட்டார். பிரசித்தி பெற்ற சர்க்கார் காரியாலயச் சிவப்பு நாடா நீண்டு கொண்டே போன காரணத்தினால் ஆஸ்தான கவிஞர் நியமன யோசனை காரியத்தில் நிறைவேறுவதற்கு இத்தனை காலம் ஆகிவிட்டது. இவ்வளவு தாமதத்தோடேனும் காரியம் நடைபெற்றதற்குக் கனம் பிரதமரின் ஊக்கமும் இடைவிடாத் தூண்டுதலுமே காரணம் என்று அறிகிறோம்.

சுயராஜ்ய இந்தியாவில் முதல் ஆஸ்தான கவிஞர்



ளான ஐம்பெரும் புலவர்களையும் வாழ்த்திப் பாராட்டுகிறோம். இந்த அருமையான நிகழ்ச்சியைக் குறித்து வசனத்தில் எவ்வளவு வாழ்த்துக் கூறினாலும் போதாது! கவி பாடி வாழ்த்துவதுதான் பொருத்தமாயிருக்கும். இதற்கு நம்முடைய ஆஸ்தான கவிஞர்களின் உதவியையே நாடவேண்டியவர்களாகிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நம்முடைய நாமக்கல் தேசபக்த கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை ஆஸ்தான கவிஞர் ஆகியிருக்கிறார். ஏற்கெனவே எண்ணற்ற தமிழ் மக்களின் இதய ராஜ்யத்தில் ஆஸ்தான கவியாக விளங்குகிறவர் அவர். காந்தி மகாராஜாவின் மகா சாம்ராஜ்யத்தில் முதல் ஆஸ்தான கவிஞர் அவர். காந்தி மகானிடம் பக்தியுள்ள தமிழர்கள் எல்லாம் நாமக்கல் கவிஞரிடம் விசேஷ அபிமானம் கொண்டவர்கள். 'காந்தியக் கவிஞர்' என்பதாகவும் பலர் அவரை அழைத்து வந்தார்கள். காந்தி மகாயுகத்தில் நடந்த விடுதலைப் போராட்டங்களைப் பற்றி நாமக்கல் கவிஞர் அருமையான பாடல்கள் இயற்றியிருக்கிறார். பல சிறந்த வசன நூல்களை இயற்றித் தமிழ்த் தாய்க்குச் சிறந்த தொண்டு செய்திருக்கிறார். அத்தகையவரை ஆஸ்தான கவி ஆக்கியதன் மூலம் சென்னை சர்க்கார் தங்களைத் தாங்களே சிறப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆஸ்தான கவிஞர்கள் ஐவருக்கும் வணக்கங்கூறி, "அமருங்கள் பீடத்தில்!" என்று கேட்டுக் கொள்கிறோம்.

பரீட்சைத் தாள்கள்

"தினத் தாள்" என்னும் பத்திரிகைக்காரர்கள் "தினச் செய்திகளை முன்கூட்டியே வெளியிடுவது தினத் தாள்" என்று சில சமயம் விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் பரீட்சைகளின் கேள்வித் தாள்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவோர் யார்? இந்தக் கேள்விக்குப் பதிலை யார் வெளிப்படுத்தப் போகிறார்கள்? சென்ற வருஷத்தில் எஸ். எஸ். எல். சி. பரீட்சைத் தாள்கள் முன்கூட்டியே வெளியாயின. இதனால் சர்க்காருக்கு அச்சுச் செலவு நஷ்டமும் மாணாக்கர்களுக்குச் சொல்ல முடியாத கஷ்டமும் ஏற்பட்டன. இந்த வருஷத்தில் கேள்வித் தாள் வெளியிடும் காரியம் யுனிவர்ஸிடிக்குப் போய்விட்டது. பி. ஏ. ஆனர்ஸ், பி. எஸ். ஸி. பரீட்சைத் தாள்களே வெளியாகி விட்டபடியால் பரீட்சைகள் தள்ளி வைக்கப் பட்டிருக்கின்றன. சில நாட்களுக்கு முன்பு கீழ்ப் பாகிஸ்தான் தலை நகரமான டாக்காவிலிருந்து ஒரு அதிசயமான செய்திவந்தது. மாணாக்கர்கள் பரீட்சை மண்டபத்துக்குள் அமர்ந்து கேள்வித் தாள்களுக்கு விடை எழுத ஆரம்பித்த பிறகு, வெளியிலிருந்து ஒலிபெருக்கிக் கருவியின் வழியாக கேள்வித்தாளிலிருந்த கேள்வி ஒவ்வொன்றுக்கும் உரக்க — பகிரங்கமாக — சரியான விடை சொல்லப்பட்டு வந்ததாம்! அந்த விடைகளை மாணாக்கர்கள் எழுதி விட்டுப் போனார்களாம்! எப்படியிருக்கிறது கதை! இதெல்லாம் என்னத்தைக் காட்டுகிறது என்றால், நம்முடைய கல்வி முறையில் இன்னமும் கல்வி கற்பது முக்கியத்துவம் அடையவில்லை, பரீட்சை மகாராஜாவின் சர்வாதிகார ஆட்சிதான் நடந்து வருகிறது என்பதைத்தான். எந்த வழியிலாவது பரீட்சையில் தேறினால் போதும் என்ற மனோபாவம் மாற வேண்டும். மாறுவதற்கு நமது கல்வி முறையில்

பரீட்சைக்குக் கொடுக்கப்படும் முக்கிய குறைய வேண்டும். கல்வி கற்பதில் மாணுக்கர்களுக்கு ஆர்வம் ஏற்படும் முறையில் கல்வி முறை அமையவேண்டும். அப்போது கல்விச் சீர்திருத்த முயற்சி வெற்றியடைந்தது என்று சொல்லக்கூடும்.

பிரதம மந்திரி தேர்தல்

நாளது மார்ச்சு மாதம் 31ம் தேதி சென்னைச் சட்டசபைகளின் காங்கிரஸ் அங்கத்தினர்கள் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு நாள் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கட்சியின் தலைவர்தான் மாகாணத்தின் பிரதம மந்திரி ஆகும் முறை வழக்கத்தில் இருப்பதால் இந்தக் காங்கிரஸ் கட்சித் தலைவரின் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

சென்ற மூன்று வருஷங்களைப் போலவே இவ்வருஷமும் தலைவர் யார் என்பது பற்றி எம். எல். ஏ., எம். எல். ஸி. க்களுக்குள் பேச்சுவார்த்தைகளும் வோட்டுச் சேகரிப்பும் நடைபெற்று வருகின்றன. சட்டசபைகளின் அங்கத்தினரை உமேதவாரி செய்யும் காரியம், அதாவது மூகவாய்க் கட்டையைப் பிடிக்கும் முறை, தீவிரமாகக் கையாளப்பட்டு வருகிறது.

கனம் ஓமந்தூர் ரெட்டியார் பிரதம மந்திரி பதவியை உதறித் தள்ளுவதற்குத் தயாராயிருக்கிறார் என்று அறிகிறோம்.


ஆனால் பொது மக்களின் அபிப்பிராயம் நாம் அறிந்தவரையில் பெரும்பாலும் கனம் ஓமந்தூர் ரெட்டியாருக்குச் சாதகமாயிருக்கிறது.

வருஷந்தோறும் கட்சித் தலைவர் தேர்தல் நடத்துவதையும் பிரதம மந்திரியை மாற்றுவதையும் பொது ஜனங்கள் விரும்பவில்லை; வெறுக்கத்தான் செய்கிறார்கள்.

இப்படி யெல்லாமிருந்தும் நம் சட்டசபை அங்கத்தினர்கள் பிரதம மந்திரியை மாற்ற விரும்புவார்களானால் அதற்குக் காரணம் என்ன வென்பதைப் பொது மக்களுக்குச் சொல்லிவிடுவது நல்லது.

அப்படி வேறொரு கட்சித் தலைவரை, வேறு பிரதம மந்திரியை, தேர்ந்தெடுப்பது அவசியமென்று ஏற்படும் பட்சத்தில் மறுபடியும் குளறுவதற்கு இடமில்லாதபடி எல்லாருமாகச் சேர்ந்து ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தால் நலமாயிருக்கும்.

சென்னைச் சட்டசபைகளில் உள்ள காங்கிரஸ் அங்கத்தினர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து காரியம் செய்வார்கள் என்று எதிர் பார்க்கிறோம். நல்லதை எதிர்பார்ப்பது எப்போதும் நல்லதே யல்லவா?



பரஸ்பர சகாயம்



அமெரிக்காவும் ருஷ்யாவும் போட்டி போட்டுக் கொண்டு அடுத்த யுத்தத்துக்குப் பலம் திரட்டி வருகின்றன.

அற்ப சுகத்தை நினைந்து

ஆனந்த சுதந்திரத்தை மறப்பதா?

"உலகிலே எதைக் காட்டிலும் அதிசயமான விஷயம் வேறில்லை?" என்று கேட்டான் யக்ஷன்.

"பிறப்பவர் இறப்பது நிச்சயம் என்று தெரிந்தும்கூட மனிதர் தாங்கள் நிலையாக இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறார்களே! அதுதான் பெரிய அதிசயம்!" என்று சொன்னார் தர்மபுத்திரர்.

ஆனால், இன்றைய உலகில் தர்மபுத்திரர் அவ்வாறு பதில் கூறியிருப்பாராயின் யக்ஷன் அதை ஒத்துக் கொண்டிருக்க மாட்டான் என்பது நிச்சயம்!

ஏனெனில் இன்று அதைக் காட்டிலும் அதிசயமான விஷயம் வேறு இருக்கிறது.

பிறநாட்டை அடிமைப் படுத்தும் ஆட்சிமுறை ஒழிந்துதான் தீர வேண்டும் என்பது ஜயந்திரிபுக்கு இடமின்றித் தெரிந்தும் கூட, அந்த ஆட்சி முறையை உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டிருக்கும் ராஜ்யங்கள் இருக்கின்றனவே, அது தான் எல்லாவற்றையும் விட அதிசயமானது.

இந்தியாவிலுள்ள தங்களுடைய குட்டி சாம்ராஜ்யம் சிரஞ்சீவியாக இருக்கப் போகிறது என்று போர்ச்சுகல் சர்க்கார் இன்னும் கனவு கண்டு வருகிறார்கள்.

பிரஞ்சு சர்க்காரோவெனில், இந்தியாவிலுள்ள பிரஞ்சுப் பிரதேசங்கள் இந்தியாவுடன் சேர விரும்பினால் அப்படியே சேரலாம் என்று சொல்லிக் கொண்டே, அவைகள் சேராமல் இருப்பதற்கான இடையூறுகளை யெல்லாம் செய்து வருகிறார்கள்.

பிரஞ்சுப் பிரதேசங்கள் இந்தியாவுடன் சேர வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி சர்வஜன வாக்கு எடுக்கப் பிரஞ்சு சர்க்கார் முனைந்துள்ளனர்.

இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டுமா, வேண்டாமா என்பதைக் குறித்துப் பிரிட்டிஷார் சர்வஜன வாக்கு எடுக்க முற்படவில்லை.

பிரஞ்சுப் பிரதேசங்கள் இந்தியாவுடன் சேரக் கூடாது என்று சொல்வதற்கு பிரஞ்சு இந்தியாவில் மனிதர்கள் இருப்பது போலவே, இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டாம் என்று கூறுவதற்கும் இந்த நாட்டில் மனிதர்கள் இருக்கத்தான் செய்தனர். கிடைத்த சுயராஜ்யத்துக்குக் கேடு விளைவிக்க முயலும் காதகர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஆனால், உலக ராஜதந்திரிகளுக்கெல்லாம் ராஜதந்திரிகளான பிரிட்டிஷார் அத்தகையோருடைய யோசனையைக் கேட்காமல் இந்தியாவை விட்டு வெளியேறித் தங்களுக்குப் பெருமையைத் தேடிக் கொண்டார்கள்.

அவர்களைப் பின்பற்றி பிரஞ்சு சர்க்காரும் இந்நாட்டிலிருந்து வெளியேறியிருப்பார்களாயின் பெருமையாக இருந்திருக்கும். ஆனால் அந்த நல்ல காரியத்தைச் செய்ய பிரஞ்சு சர்க்கார் தவறி விட்டார்கள்.

*　　*　　*

அதற்கு அடுத்தபடியாக, சர்வஜன வாக்கு எடுக்கும் விஷயத்திலாவது அவர்கள் நேர்மையுடன் நடக்க முன் வந்திருக்கலாம். ஆனால், அவர்கள் எடுக்க விரும்பும் சர்வஜன வாக்கு ஊழலின்றி ஒழுங்காக நடைபெறுமா என்ற சந்தேகத்துக்கு இடம் அளித்திருக்கிறது.

தண்ணீரிலிருந்து தண்ணீரைப் பிரிக்க முடியுமா? முடியாது. அது போலவே இந்தியாவிலிருந்து இந்தியர் அடங்கிய இந்தியப் பிரதேசங்களைப் பிரிக்க முடியாது.

இந்தத் தெளிவான விஷயத்தைப் பண்டித ஜவாஹர்லால் நேரு பல தடவைகளிலும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

அப்படியிருந்தும், அவ்வாறு பிரிக்க முடியுமா, முடியாதா என்ற ஆராய்ச்சியில் பிரஞ்சு சர்க்கார் ஈடுபட்டுக் குழப்படி செய்து வருகிறார்கள்.

சர்வஜன வாக்கு எடுப்பதன் சம்பந்தமாகக் கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கை அட்டவணையைத் தயாரிப்பதற்காகப் பிரஞ்சு சர்க்கார் புதுச்சேரியில் ஒரு மகாநாட்டைக் கூட்டினார்கள்.

புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் பிரதேசங்களைச் சேர்ந்த முனிசிபல் சபை அங்கத்தினர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்கள் செய்துள்ள சிபார்சுகள் விநோதமாகவும், அரசியல் நீதிக்கும் பகுத்தறிவுக்கும் முரணாகவும் இருக்கின்றன.

• • •

எட்டு மாதங்களுக்குப் பிறகு, அடுத்த டிசம்பர் மாதம் பதினோராம் தேதி பிரஞ்சுப் பிரதேசங்களில் சர்வஜன வாக்கு எடுக்கவேண்டும் என்று புதுச்சேரி மகாநாடு சிபார்சு செய்திருக்கிறது.

முனிசிபல் தேர்தல்களில் நேர்மையுடன் நடந்து கொள்ளாத பிரஞ்சு அதிகாரிகள், சர்வஜன வாக்கு எடுக்கும் விஷயத்தில் நேர்மையாக நடந்து கொள்வார்கள் என்று எவ்விதம் எதிர்பார்க்க முடியும்?

இதில் ஒரு வேடிக்கை என்னவெனில், பிரஞ்சுப் பிரதேசங்களிலுள்ள சகல ஜனங்களும் இந்தியாவுடன் சேரவேண்டும் என்று சர்வஜன வாக்கின்மூலம் தீர்ப்புக் கூறினால்கூட அதை அங்கீகரிக்கக் கூடாதாம்!

அவ்வாறு சேருவதற்கு முப்பது வருஷங்கள் அவகாசம் கொடுக்கவேண்டும் என்றும், அந்த இடைக்காலத்தில் அந்தப் பிரதேசங்களுக்குப் பூரண சுயேச்சை அளிக்க வேண்டும் என்றும் மகாநாட்டினர் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

அவர்கள் கோரும் பூரண சுயேச்சைக்கு ஏதேச்சாதிகாரம் என்பதே பொருள்.

சர்வஜன வாக்கு எடுக்குமுன் அத்தகைய நிபந்தனையை ஏற்றுக் கொள்வதாக இந்திய சர்க்கார் உறுதிகூற வேண்டுமாம்.

இந்திய ஜனங்களையும், அந்த ஜனங்களின் பிரதிநிதிகளால் நடத்தப்படும் சர்க்காரையும் பொறுத்த ஒரு விஷயத்தை யொட்டி நிபந்தனை எதுவும் விதிக்க மற்றொரு தேசத்தினருக்கோ, அல்லது அந்தத் தேசத்தினரால் ஆட்டி வைக்கப்படும் நபர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்பதை மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் உணராதது ஆச்சரியமாக இருக்கிறது.

பிரஞ்சுப் பிரதேசங்கள் இந்தியாவுடன் ஐக்கியப்படவேண்டும் என்பதுதான் இயற்கை காட்டும் வழி. ஜனநாயக முறையும் அதுதான். அந்த நேர்மையான வழியை விட்டு அந்தப் பிரதேசங்கள் தனித்து வாழவேண்டும் என்று கூறுவோர், தாங்கள் பெறக்கூடிய அற்ப வசதிகளுக்காக ஆனந்த சுதந்திரத்தையே கைவிட்டவர்கள் ஆவர்.

* * *

பிரிட்டிஷ் வல்லரசின் ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழித்த பாரதத் தவப் புதல்வர்களுக்குப் பிரஞ்சுக்காரர்களின் அற்ப ஆதிக்கத்தை ஒழிக்க அதிக காலமாகாது.

ஆனால் பொறுமையையே பூஷணமாகக் கொண்ட நமது தலைவர்கள் அவசரப்பட்டுக் கொண்டு எதுவும் செய்ய விரும்பவில்லை.

எனினும், அவர்களுடைய பொறுமைக்கும் எல்லையுண்டு என்பதை இந்தியசர்க்கார் சமீபத்தில் செய்துள்ள தீர்மானத்திலிருந்து உணர்ந்து, பிரஞ்சு சர்க்கார் தங்களுடைய விபரீதமான போக்கை மாற்றிக் கொள்வார்களாக.

பொருளாதாரத்துறை சம்பந்தப்பட்ட வரையில் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து பிரஞ்சுப் பிரதேசங்களை இந்திய சர்க்கார் அன்னியப் பிராந்தியமாகவே கருதத் தீர்மானித்திருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் பிரஞ்சு இந்திய ஜனங்களின் சௌகரியத்துக்காகச் செய்து கொள்ளப்பட்ட தீர்வை ஒப்பந்தத்தை அந்தத் தேதியிலிருந்து ரத்து செய்து விட இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்தியர்களின் பிறப்புரிமையையே பாழாக்க நினைக்கும் பிரஞ்சு சர்க்கார் விஷயத்தில் அத்தகைய நடவடிக்கை எடுத்துக் கொள்ள இந்திய சர்க்கார் முற்படுவதில் தவறு எதுவுமில்லை.

மேற்படி தீர்மானத்தின் பலனாக பிரஞ்சுப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களுக்குச் சிறிது கஷ்டம் நேரலாம். ஆனால், அவர்கள் எதிர்காலத்தில் அடையப் போகும் மகத்தான நன்மையை,—கண்ணினுமினிய சுதந்திரத்தை மனதில் கொண்டு மேற்படி கஷ்டத்தைப் பொருட்படுத்த மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களிலுள்ள ஜனங்களின் க்ஷேமம் ஒன்றே தங்களுடைய லட்சியம் என்று பசப்பும் பிரஞ்சு அதிகாரிகள், தாங்கள் அங்கிருந்து வெளியேறுவதே ஜனங்களின் உண்மையான, நிரந்தரமான க்ஷேமத்துக்கு உகந்தது என்பதை பிரிட்டிஷாரைப்போல உணர்ந்துகொள்வார்களா?

சரபோஜியின் கலைக் கோவில்

ரா.கி.



சரஸ்வதி மகால் புத்தகசாலை உள்ள கட்டிடம் கலைமகள் கோயில் கொண்டு எழுந்தருளுவதற்குத் தகுந்த அழகான கொலு மண்டபமாகும். மண்டபத்திற்குள் பிரவேசித்ததும் அதன் விசாலமும் கம்பீரமும் கவனத்தைக் கவர்கின்றன. பெரிய பெரிய பிரம்மாண்டமான தூண்கள் வரிசை வரிசையாக நின்று மண்டபத்தைத் தாங்குகின்றன. மேலே நோக்கினுல் ஒன்றன்பின் ஒன்ருக அழகிய கமான் வளைவுகள் காட்சி தருகின்றன. இந்தக் காலத்துப் புத்தகசாலைகள் எவ்வளவு அழகுணர்ச்சியே அற்ற ஸப் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் சாவடியைப்போன்ற கட்டிடங்களில் இருக்கின்றன என்பதைப் பார்த்துவிட்டு, இந்த சரஸ்வதி மகால் மண்டபத்தையும் பார்த்து மனதிற்குள் ஒப்பிட்டால், "ஆகா! நம் முன்னோர்கள் கல்விக்கும் கலைக்கும் புத்தகத்துக்கும் எவ்வளவு மகிமை தந்திருந்தார்கள்!" என்ற வியப்பு நிச்சயம் உண்டாகும்.

சரஸ்வதி மகாலுக்குள் பிரவேசித்ததும் முதலில் இடது பக்கக் கோடிக்கு அழைத்துச் செல்லுகிருர்கள். அங்கே அச்சிட்ட புத்தகங்கள் அடுக்கி யிருக்கின்றன. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மகாராஷ்டிரம், சமஸ்கிருதம் ஆகிய பல பாஷைகளிலும் சுமார் 9,000 புத்தகங்கள் இருக்கின்றன. ஒன்பதினுயிரம் புத்தகங்களைக் காட்டிலும் அதிகமுள்ள புத்தகசாலைகள் எவ்வளவோ இருப்பது உண்மைதான். ஆனல் சரஸ்வதி மகால் புத்தகங்களில் விசேஷமென்ன வென்றால், அவ்வுள்ளவை பெரும்பாலும் 120 வருஷங்களுக்கு முன்னுல் அச்சிடப்பட்டவையாகும். உதாரணமாக, ஸர் வால்ட்டர் ஸ்காட் எழுதிய பிரசித்திபெற்ற சரித்திர நாவல்களின் முதல் பதிப்புப் புத்தகங்களை இங்கே காணலாம். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் புகழ்பெற்ற புராதன ஆசிரியர்களின் முதல் பதிப்பு நூல்களை **ஒன்றுக்கு நூறு மடங்கு** விதம் அதிக விலை கொடுத்து வாங்குவார்கள்.

அந்தக் காலத்தில் வெளியான ஆங்கில இலக்கிய நூல்களைத் தவிர சரித்திர நூல்கள், விஞ்ஞான நூல்கள் முதலியவை இருக்கின்றன. ஒவ்வொரு புத்தகத்திலும் முதல் பக்கத்தில் சரபோஜி மகாராஜாவின் கையெழுத்தும் புத்தகம் வாங்கப்பட்ட வருஷமும் காணப்படுகின்றன. இதிலிருந்து சரபோஜி மகாராஜா எவ்வளவு சிரத்தையுடன் புத்தகங்களைத் தருவித்துப் படித்து இந்தப் புத்தக நிலையத்தில் சேர்த்து வைத்திருக்க வேண்டும் என்பதை நன்கறியலாம்.

அச்சுப் புத்தகங்களில் ஒரு முக்கியமான பகுதி. படப் புத்தகங்கள். (பாட புத்தகங்கள் அல்ல; படங்கள் பிரதானமாக உள்ள புத்தகங்கள்.) இவை சரஸ்வதி மகாலின் வலது கோடியில் விசேஷமாக எடுத்து வைத்துக் காட்டப்படுகின்றன. உலகத்தின் பல தேசங்

களிலும் உள்ள புகழ்பெற்ற நகரங்கள், ஸ்தலங்கள், — இவற்றின் அபூர்வமான சித்திரப் படங்கள் அடங்கிய நாலு அரும் பெரும் புத்தகங்கள் இருக்கின்றன. அசுவ சாஸ்திரம், கஜ சாஸ்திரம் முதலியவற்றைச் சித்திரங்களைக் கொண்டு விளக்கும் அபூர்வ நூல்கள் இருக்கின்றன.

எல்லாவற்றிலும் விசேஷமான சித்திரப் புத்தகம் பிரஞ்சுக்காரர் ஒருவர் எழுதியது. இந்த நூல் முழுவதிலும் மிருகங்கள்—பட்சிகளின் முகத் தோற்றங்களுக்கும் மனிதர்களுடைய முகத் தோற்றங்களுக்கும் உள்ள விசித்திரமான ஒற்றுமையை எடுத்துக் காட்டும் அற்புத சித்திரங்கள் காணப்படுகின்றன. கழுகின் முகத்துக்கும் மனிதன் முகத்துக்கும் விசேஷ ஒற்றுமை உண்டு என்று சொன்னால் சாதாரணமாக நாம் நம்ப முடியாது. 'அது எப்படி இருக்கும்?'' என்போம். அதே மாதிரி "அவன் மூஞ்சி ஆட்டு மூஞ்சி மாதிரி இருக்கிறது!'' என்று சொன்னால், ஏதோ வசைமொழியாகவே தோன்றும்; உண்மை என்று படாது. ஆனால் இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தால் நம் கருத்தை மாற்றிக் கொள்ளலாம். பூலோகத்திலுள்ள மனிதர்கள் எல்லாரும் விலங்குகள் பறவைகளின் மறு ஜன்மந்தான் என்று நிச்சயம் அடைவோம்! அந்தப் புத்தகத்திலிருந்து ஒரு பக்கத்துப் படத்தை அப்படியே புகைப்படம் எடுத்து இந்த இதழில் வெளியிட்டிருக்கிறது. நல்ல வேளையாக மிருகங்களும் பட்சிகளும் இந்தப் படங்களைப் பார்க்க முடியாது என்று எண்ணி நாம் திருப்தியடையலாம். அவை இப்படங்களைப் பார்க்குமானால், சே! கேவலம் மனிதர்களுடைய முகங்களைப் போலவா நம்முடைய முகங்கள் இருக்கின்றன! பிரம்மதேவர் இத்தகைய அநீதி செய்துவிட்டாரே!'' என்று எண்ணி வருத்தப்படக் கூடும் அல்லவா?


* * *


சரஸ்வதி மகாலில் உள்ள புத்தகங்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்: (1) அச்சுப் புத்தகங்கள்; (2) காகிதத்தில் பேனா மையினால் எழுதிய கையெழுத்துப் புத்தகங்கள்; (3) ஓலைச்சுவடிகள்.—இவற்றில் அச்சுப் புத்தகங்களைப் பற்றி மேலே சொல்லியாகி விட்டது.

கையெழுத்துப் புத்தகங்களின் காகிதம் மிகப் பழமையானது; எனினும், அழுத்தமாயும் அழகாயுமிருக்கிறது. சில கையெழுத்துப் பிரதிகளின் மேலட்டைக் காகிதத்தில் செய்திருக்கும் கோலச் சித்திர வேலைப்பாடுகள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பிரமிக்கும்படி செய்கின்றன. "புஸ்தகம் ஹஸ்த பூஷணம்'' என்னும் வசனத்துக்கேற்பக் கையில் புஸ்தகத்தை எடுத்தால் கைக்கு அது ஒரு ஆபரணமாயும் அலங்காரமாயுமிருக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயே அப்படி மேலட்டையில் சித்திரவேலை செய்திருக்கிறார்கள். சாதாரண மனிதர்களின் கைகளுக்கு மட்டுமல்ல; சகல கலாவாணியான சரஸ்வதி தேவியின் திருக் கரத்துக்கே அழகு செய்யக் கூடியவாறு அந்தக் கையெழுத்துப் புத்தகங்களின் மேலட்டையை அலங்கரித்திருக்கிறார்கள்!

சரஸ்வதி மகாலில் மிக முக்கியமான பகுதி ஓலைச்சுவடிகள் வைத்திருக்கும் பகுதியேயாகும். மரச் சட்டங்களினால் உன்னதமாகச் செய்யப்பட்டிருக்கும்

இந்தமாதிரி வரிசைவரிசையாக ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகள் சரஸ்வதி மகாலில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கங்கே வெள்ளையாகத் தெரியும் மருந்துப் பொட்டணங்களைக் கவனிக்கவும்.





காகிதத்தில் கையினால் எழுதியுள்ள புத்தகப் பிரதிகளின் மேலட்டைகள் இத்தகைய சித்திரக்கோல அலங்காரங்களுடன் விளங்குகின்றன.

திறந்த அலமாரிகளில் இந்த ஓலைச் சுவடிகள் வரிசை வரிசையாகக் கண்ணுக் கெட்டியவரை அடுக்கி வைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தால் பிரமிப்பும் வியப்பும் உண்டாகத்தான் செய்யும். ஆகா! இத்தனை ஓலைச்சுவடிகளையும் அந்தக் காலத்தில் சேகரிப்பதற்கு எவ்வளவு மகத்தான பிரயத்தனம் செய்திருக்க வேண்டும்?

ஆம்! சரபோஜி மகாராஜா பிரமாத பிரயத்தனங்கள் செய்துதான் இத்தனை ஓலைச்சுவடிகளைச் சேகரித்தார். இராமேசுவரத்திலிருந்து காசிவரையில் ஆட்களை அனுப்பி ஓலைச்சுவடிகளைச் சம்பாதித்து வரும்படி செய்தார். மொத்தம் அறுபதினாயிரம் பவுன் செலவு செய்து இந்தப் புத்தகசாலையை அமைத்தார்!

மேலெழுந்த வாரியாகச் சிந்திப்பவர்கள் "இவ்வளவு பிரயத்தனமும் எதற்காக? இத்தனை ஓலைச்சுவடிகளையும் எத்தனை பேர் வாசித்திருக்கப் போகிறார்கள்? வாசித்து அடையும் பிரயோஜனம்தான் என்ன?" என்று கேட்பார்கள்.

கலையையும் கல்வியையும் பொறுத்த காரியங்களில் "இதனால் எத்தனை பேர் பயன் அடைந்தார்கள்?" என்னும் எண்ணிக்கையை முக்கியமாகக் கருதுவதில்லை.

இந்தியா தேசம் ஒரே ஒரு ஸர் சி. வி. ராமனைத்தான் சென்ற நூறு வருஷத்தில் பெற்றெடுத்திருக்கிறது. ஆயினும் அந்த ஒரு மேதாவியினால் இந்தியா தேசத்துக்கே உலகத்தின் முன்னிலையில் கௌரவம் ஏற்பட்டிருக்கவில்லையா?

லண்டன் நகரில் உள்ள புத்தகசாலையில் ஆயிரக்கணக்கான அபூர்வ சமஸ்கிருத நூல்களும் தமிழ் நூல்களும் இருக்கின்றன. இந்தியாவில் கிடைக்காத சமஸ்கிருத—தமிழ் புத்தகங்கள் பல லண்டன் புத்தகசாலையில் இருக்கின்றன. ஏராளமான செலவு செய்து அந்த நூல்களைச் சேகரித்திருக்கிறார்கள். "என்ன பிரயோஜனம்? எத்தனைபேர் படிக்கிறார்கள்?" என்று கேட்பதில்லை.

அத்தகைய மனோ பாவத்துடனேயே சரபோஜி மகாராஜா அறுபதினாயிரம் பவுன் செலவு செய்து இந்த முப்பதினாயிரத்துச் சொச்சம் ஓலைச்சுவடிகளையும் சேகரம் செய்து வைத்தார். அதன் பயன் என்ன என்பது பற்றிச் சிந்திக்கவில்லை. யார் கண்டார்கள்? ஒரு காலத்தில் யாரேனும் ஒரு உண்மையான கல்விமான் இந்தச் சரஸ்வதி மகாலுக்கு வரலாம். ஓலைச்சுவடிகளைப் படித்து ஆராய்ச்சி செய்யலாம். முப்பதினாயிரத்துச் சொச்சம் ஓலைச்சுவடிகளில் ஏதேனும் ஒரு சுவடியை அற்புதமான இலக்கியப் பொக்கிஷம் என்பதாகத் தெரிந்துகொண்டு வெளியிடலாம். அத்தகைய ஒரு உண்மை இலக்கிய நூல் கிடைக்குமானால் சரபோஜியின் அவ்வளவு பிரயத்தனமும் பணச் செலவும் பயனளித்தன என்று சொல்லலாம் அல்லவா?


சரபோஜி மகாராஜாவைப் போலவே அவருடைய குமாரர் சிவாஜி ராஜாவும் புத்தகப் பிரியராக இருந்திருக்கிறார். பிரிட்டிஷ் சர்க்கார் செய்த ஏற்பாட்டின்படி சிவாஜி ராஜாவின் வருஷ வருமானம் ஒன்றரை லட்சம் ரூபாய். இந்தத் தொகையில் எட்டில் ஒரு பங்கை அதாவது

இருபத்தோராயிரம் ரூபாயைச் சிவாஜி ராஜா சரஸ்வதி மகால் புத்தகசாலையின் பராமரிப்புக்காகக் கொடுத்து வந்தார்!

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தஞ்சாவூர் ராஜவம்சத்தின் சந்ததிகள் தங்கள் சொத்துக்களைப் பங்கு பிரித்துக் கொண்டபோது, சரஸ்வதி மகாலையும் அதிலுள்ள புத்தகங்களையும் பிரித்துக் கொள்ளும் யோசனை சொல்லப்பட்டது. சரபோஜியின் வம்சத்தில் பிறந்தவர்கள் அந்த யோசனையை மறுத்து விட்டார்கள். சரஸ்வதி மகாலைப் பொது மக்களின் உடைமையாக்கியதுடன் அதன் பராமரிப்புக்காக ஒரு லட்சம் ரூபாய் மூலதனம் ஏற்படுத்தினார்கள். 1918-ல் இந்த ஏற்பாடு அமுலுக்கு வந்தது. மேற்படி தொகை பிரிட்டிஷ் சர்க்கார் கடன் பத்திரங்களில் போடப்பட்டது. முதலில் வட்டி வருஷத்துக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைத்தது. பின்னால் வட்டி விகிதம் குறைந்து மூவாயிரத்துச் சொச்சமாயிற்று. இந்தச் சொற்ப வருஷ வருமானத்தைக் கொண்டு சரஸ்வதி மகால் புத்தகசாலை பராமரிக்கப்பட்டு வந்தது.

சரஸ்வதி மகாலில் உள்ள புத்தகங்களையும் ஓலைச்சுவடிகளையும் ஒரு வாரத்துக்கு ஒருதடவை எடுத்துத் தூசு துப்பு தட்டித் திரும்பவும் அடுக்கி வைக்கும் காரியத்துக்கே குறைந்த பட்சம் பத்து ஆட்கள் வேண்டும்! தலைக்கு முப்பது ரூபாய் சம்பளம் கொடுப்பது என்றால் வருஷத்துக்கு மூவாயிரத்து அறுநூறு ரூபாய் ஆகிவிடும்.

தூசு துப்பு தட்டி வைத்தால் மட்டும் போதுமா? ஓலைச்சுவடிகளின் ஆயுளை நீடிக்கச் செய்வதற்கு அவ்வப்போது மருந்து எண்ணெய் தடவவேண்டும்.


A COLLECTION OF MEMOIRS ON THE VARIOUS MODES ... THE NATIONS OF THE SOUTHERN PARTS OF INDIA DIVIDE TIME.

சரஸ்வதி மகாலில் உள்ள ஒவ்வொரு அச்சுப் புத்தகத்திலும் சரபோஜி ராஜாவின் சொந்தக் கையெழுத்தைக் காணலாம்.

புத்தகங்களுக்கும் ஓலைச்சுவடிகளுக்கும் சத்துருக்களாகப் பற்பல ஜீவராசிகள் இருக்கின்றன. கறையான், பாச்சை முதலியவை அணுகுண்டு வேகத்தில் ஓலைச்சுவடிகளை உண்டு ஜீரணமும் செய்து விடும். அரும்பாடுபட்டுத் தேடிச் சேகரித்த ஓலைச் சுவடிகளை மேற்படி ஜீவராசிகள் சாப்பிட்டு விடாமல் காப்பாற்ற வேண்டும். அதற்குரிய திரவ மருந்துகளை அவ்வப்போது தெளிக்க வேண்டும். மருந்துகளைப் பொட்டணம் கட்டி வைக்க வேண்டும்.

சுவடிகளின் சத்துருக்களில் எலிகளை இலேசில் சமாளிக்க முடியாது. சில சமயம் மருந்துப் பொட்டணங்களைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிடும். எலிகளைப் பயமுறுத்தித் துரத்துவதற்கு ஒரு வழியை நம் முன்னோர்கள் கையாண்டார்கள். பாம்பு சட்டை உரித்துப் போடும் நுண்ணிய வெண்மையான மேல் தோல் இருக்கிறதல்லவா? அந்தப் பாம்புச் சட்டையை ஆங்காங்கு புத்தக அலமாரிகளில் போட்டு வைத்து எலிகளை மிரண்டு ஓடும்படி செய்து வந்தார்கள்.

மேற்கூறிய முறைகளையெல்லாம் தற்சமயம் சரஸ்வதி மகால் புத்தகசாலையின் பராமரிப்புக்காகக் கையாண்டு வருகிறார்கள். ஆயினும் என்ன? புத்தகங்களும் சுவடிகளும் வரவரக் கிலமாகிக் கொண்டுதான் வருகின்றன. தொட்டு எடுத்தால் பொலபொலவென்று உதிரக் கூடிய நிலைமைக்குச் சில ஓலைச்சுவடிகள் வந்திருக்கின்றன!

இத்தகைய சுவடிகளில் ஏதேனும் ஒன்றோ சிலவோ அருமையான இலக்கியப் பொக்கிஷங்களாக இருக்கலாம் அல்லவா? இவை போய் விட்டால் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகி விடலாம் அல்லவா? கடல் கொண்டு போன பழந் தமிழ் நூல்களைப் பற்றி இப்போது நாம் அழுது புலம்பிக் கொண்டிருப்பது போலச் சரஸ்வதி மகால் சுவடிகளைப் பற்றியும் வருத்தப்பட நேரிடலாம் அல்லவா?

• • •

கடைசியாக, நமது பிரதம மந்திரி கனம் ஓமந்தூர் ரெட்டியார் அவர்களின் ஆட்சி காலத்தில் சரஸ்வதி மகால் புத்தகசாலைக்கு நல்லகாலம் பிறந்திருக்கிறது என்று தோன்றுகிறது.

பிரதம மந்திரி ரெட்டியார் பழமையில் பற்றுடையவர். நமது நாட்டின் பழைய பண்பாடு, பழைய கலைகள், பழைய இலக்கியங்கள் ஆகியவற்றில் மிக்க பக்தி கொண்டவர். ஆதலின் சரஸ்வதி மகாலில் உள்ள பழைய ஓலைச்சுவடிகளில்



"இந்தப் புத்தகம் இரண்டாவது பதிப்பு வெளியாகுமானால் அதற்கு இதை ஆதார பிரதியாக உபயோகிக்க வேண்டும்" என்று ஜான் வாரன் என்னும் நூலாசிரியர் எழுதியிருக்கிறார். புத்தகத்துக்குள் திருத்தங்கள் சரபோஜி மகாராஜாவினால் செய்யப்பட்டிருக்கின்றன.


எத்தகைய அருமையான கலைச் செல்வங்கள் இருக்கின்றனவோ,—அவை யெல்லாம் மக்களுக்குப் பயன்படாமல் அழிந்து விட்டால் என்ன செய்வது என்ற கவலை கனம் ரெட்டியாருக்கு ஏற்பட்டது. இதன் பயனாக 1947-ம் வருஷம் ஜூன் மீ 2உ சரஸ்வதி மகால் புத்தகசாலையைக் குறித்து விசாரித்து யோசனை சொல்ல ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இக் கமிட்டியின் தலைவர் பிரபல வக்கீலும் காங்கிரஸ் தியாகியுமான ஸ்ரீ எஸ். கே. சடகோபாச்சாரியார் எம். ஏ., பி. எல். அவர்கள். கமிட்டியின் அங்கத்தினர்: சரஸ்வதி மகால் காரியதரிசி ஸ்ரீ எஸ். கோபாலன், பி. ஏ., பி. எல்., தஞ்சாவூர் ராஜ வம்சத்தைச் சேர்ந்த ஸ்ரீ பிரதாப சிம்ம ராஜா, ஸ்ரீ ஏ. வேதரத்தினம் ஆகியவர்கள். சரஸ்வதி மகாலைப் பற்றிய எல்லா அம்சங்களையும் நன்கு விசாரித்து மேற்படி கமிட்டியார் விவரமான அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே பழுதுபடத் தொடங்கியிருப்பதால் உடனே எழுத்துப் பிரதி செய்ய வேண்டிய ஓலைச்சுவடிகளும் காகிதக் கையெழுத்து நூல்களும் 327 இருக்கின்றன என்றும், இவற்றைத் தவிர கூடிய சீக்கிரத்தில் பிரதி செய்யவேண்டிய நூல்கள் 3,500 இருக்கின்றன என்றும் கமிட்டியார் மதிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த வேலையை நாலு வருஷத்தில் செய்வதற்கு வேண்டிய சிப்பந்திகள் இவ்வளவு பேர் என்பதையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச சம்பளத்தையும் மதிப்பிட்டு முதல் வருஷத்தில் 93,380 ரூபாயும் இரண்டாவது வருஷத்தில் 58,880 ரூபாயும் சர்க்கார் கொடுத்தால் முக்கியமான 3,827 நூல்கள் வீணாய்ப் போகாமல் காப்பாற்றலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த அறிக்கையின்பேரில் சென்னை சர்க்கார் சென்ற வருஷத்தில் இருபதினாயிரம் ரூபாய் அநுமதித்தார்களாம். பிறகு, சிக்கனத்தை முன்னிட்டு அதை ஆறாயிரமாகச் செய்து விட்டார்களாம்!

இந்த வருஷத்தில் நமது பிரதம மந்திரியின் பிடிவாதத்தின்பேரில், சரஸ்வதி மகாலுக்கும் சென்னையிலுள்ள ஓரியண்டல் லைப்ரரிக்குமாகச் சேர்த்து ஒரு லட்சம் ரூபாய் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது. அநுமதித்த தொகை உரிய காலத்தில் போய்ச் சேரவேண்டும்.



சரஸ்வதி மகால் காரியதரிசி ஸ்ரீ எஸ். கோபாலன் பி.ஏ. பி.எல்; ஆராய்ச்சியாளர் ஸ்ரீ கே. வாஸுதேவ சாஸ்திரி பி. ஏ.,

---

போய்ச் சேர்ந்து சரியான முறையில் வேலை தொடங்கி நடக்கவேண்டும்.

• • •

இத்தனை காலங் கழித்துத் தஞ்சை சரஸ்வதி மகால் புத்தகசாலையைப் பார்க்கும் பேறு பிரதம மந்திரி ரெட்டியார் அவர்களின் ஊக்கத்தினால்தான் எனக்குக் கிடைத்தது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு நன்றி செலுத்துகிறேன்.

சரஸ்வதி மகாலில் உள்ள அத்தனை ஓலைச்சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் காப்பாற்றி மக்களுக்குப் பயன் படும்படி செய்துவிட வேண்டு மென்பது பிரதம மந்திரி ரெட்டியாரின் ஆசை. இந்தப் பெரிய திருப்பணிக்காக இந்திய சர்க்காரிடம் முப்பது லட்சம் ரூபாய் நன்கொடை கோரி யிருக்கிறார்.

முக்கியமாக, சரஸ்வதி மகாலில் உள்ள சித்த வைத்திய நூல்களைப் பெயர்த்தெழுதி அச்சுப் போட்டுவிட வேண்டும் என்று பிரதமர் ரெட்டியார் விரும்புகிறார்.

சித்த வைத்தியத்தில் நம் பிரதமருக்குப் பரிபூரண நம்பிக்கையும் ஆர்வமும் உண்டு. தமிழ் நாட்டில் முன் காலத்தில் வாழ்ந்த சித்த புருஷர்கள் தங்களுடைய யோக சித்தியினாலும் ஞான சக்தியினாலும் மனிதர்களுக்கு வரக்கூடிய பல ரோகங்களுக்கு ஔஷதங்களைக் கண்டு பிடித்துப் பாடலாக எழுதி வைத்திருக்கிறார்கள். எளிய தமிழ்ப் பாடல்கள்தான் என்றாலும், அவற்றில் உள்ள சிகிச்சை முறைகளையும் ஔஷத முறைகளையும் தெரிந்துகொள்வதற்குச் சித்த வைத்திய சாஸ்திர ஞானம் வேண்டும். சிற்சில மர்மமான சொற்களுக்குப் பொருள் தெரிந்தவர்கள் தான் மேற்படி பாடல்களுக்கு அர்த்தம் செய்யலாம். மற்றவர்கள் செய்யும் அர்த்தம் அனர்த்தமாக முடியக்கூடும்.

சித்த வைத்திய மர்மப் பிரயோகங்களுக்குப் பொருள் தெரிந்தவர்கள் வெகு சிலர்தான் இப்போது இருக்கிறார்கள். அவர்களும் மறைந்து விட்டால் பிறகு அந்த அருமையான நூல்கள் எல்லாம் வியர்த்தமாகப் போய்விடும்.— இவ்விதம் பிரதம மந்திரி ரெட்டியார் கருதுவதால் உடனே சித்த வைத்திய நூல்கள் எல்லாவற்றையும் அச்சிட்டுவிட வேண்டும் என்று விரும்புகிறார்.

இது விஷயத்தில் தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு அச்சுக்கூடமும் உதவி செய்ய வேண்டும் என்று கோருகிறார். ஒன்று அல்லது இரண்டு புத்தகங்களைத் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு அச்சுக் கூடமும் அச்சிட்டுக் கொடுக்க ஒப்புக் கொண்டால் காரியம் விரைவாக நடந்தேறக் கூடும். ஏதாவது ஒரு அச்சுக் கூடத்தையே நம்பி யிருந்தால் நம்முடைய தலைமுறையில் நடைபெறாது. இந்த மந்திரி சபையின் ஆட்சியில் நடைபெறாது என்று சொல்லவே வேண்டியதில்லை.

• • •

சரஸ்வதி மகால் புத்தகசாலையை நிர்வகிப்பதற்கு இப்போது ஒரு சபை இருக்கிறது. சர்க்கார் நியமித்த சபை தான். இதன் காரியதரிசி ஸ்ரீ எஸ். கோபாலன் பி.ஏ., பி.எல். விசேஷமான கல்விப் பற்றும் சரித்திர ஆராய்ச்சிப் பற்றும் உடையவர். சரஸ்வதி மகால் நிர்வாகத்தின் பொறுப்பைப் பல வருஷ காலமாக ஏற்று நடத்தி வருகிறார்.

சென்ற வருஷத்திலிருந்து ஸ்ரீ கே. வாஸுதேவ சாஸ்திரி பி. ஏ. 'சரஸ்வதி மகால் ஆராய்ச்சியாளர்' என்னும் பெரிய பட்டத்துடன் தொண்டு செய்து வருகிறார். பட்டம் பெரிதே யொழியச் சம்பளம் ரூபாய் ஐம்பதுதான்.

இன்னொரு பி. ஏ. பட்டதாரி பல வருஷ காலமாகச் சொற்ப சம்பளத்தில் சரஸ்வதி மகால் லைப்ரேரியன் உத்தியோகம் பார்த்து வருகிறார்.

சரஸ்வதி மகால் புத்தகசாலையைப் பார்ப்பதற்கும் அதன் சரித்திரத்தைத் தெரிந்து கொள்வதற்கும் மேற்கூறிய மூவரும் எனக்குப் பேருதவி செய்தார்கள். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



வட்ட மேஜை

★ தமிழ்நாட்டின் வட எல்லை

சென்ற மார்ச் மாதம் 7-ந் தேதி சென்னை பிரதமர் ஸ்ரீ ராமசாமி ரெட்டியார் திருப்பதியில் ஸ்ரீ வெங்கடேசுவரர் கல்லூரியின் கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டுகையில் அற்புதமாக சொற்பொழிவு ஒன்று செய்தார். "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சங்க கால இலக்கியங்களும் சிலப்பதிகாரமும் வேங்கடத்தைப் புகழ்ந்து தமிழகத்தின் பரம்பரையான வட எல்லையாகக் கூறியிருக்கின்றன" என்றார். என் மனப்பூர்வமாய் ரெட்டியாருக்கு இதற்காக ஒரு 'ஜே' போடுகிறேன். திருப்பதி தமிழகத்தின் வட எல்லையாகத் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது. சரித்திரபூர்வமாக நமக்கு அத்தாட்சிகளும் இருக்கின்றன. நாம் திருமலை, திருப்பதி, திருச்சானூர் கோயில்களில் காணும் கல்வெட்டுகள் முக்காலுக்கு மேல் தமிழில்தான் இருக்கின்றன. பல்லவர்கள், சோழ அரசர்கள், பாண்டியர்கள், விஜயநகரத்தார்கள் இவர்களின் கல்வெட்டுகள் இருக்கின்றன. உதாரணமாக ஒரு கல்வெட்டில் "சோழமண்டலத்துத் திருவேங்கடக் கொட்டத்துத் திருக்கடவூர் நாட்டுத் திருச்சுகனூர்.........." என்றிருக்கிறது. (திருமலை, திருப்பதி தேவஸ்தானம் 1931-ல் செய்த பிரசுரத்தின்படி) இன்னொரு கல்வெட்டிலிருந்து, 'செம்பொன்'னை 'கழஞ்சு' என்னும் எடை அளவினால் நிறுத்து வந்தார்கள் என்று புலனாகிறது. கிருஷ்ணதேவராயர் போன்ற தெலுங்கு அரசர்கள், இக்கோயில்கள் அவர்கள் ஆதினத்தின் கீழ் இருக்கையில், இக் கோயில்களுக்கு சன்மானங்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால், இத் தெலுங்கு அரசர்களின் கல்வெட்டு சாசனங்களின் பல தமிழில்தான் இருக்கின்றன. இதிலிருந்து என்ன புலனாகின்றது? திருப்பதி தமிழர் ஊராய் இருந்திருக்க வேண்டுமென்றும், செதுக்குவதற்குத் தமிழ் அறிந்த சிற்பிகள்தான் கிடைத்திருக்க வேண்டுமென்றும் தெளிவாகத் தெரிகிறது.

பிரதமர் கூறியபடி தமிழ்ப் பிரபந்தம் இயற்றிய பன்னிரு ஆழ்வார்களும் வேங்கடத்தைக் குறித்துத் தேனினுமினிய பாடல்கள் பாடியிருக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த ஸ்ரீ ராமானுஜரும் திருமலையின் புகழைப் பாடியிருக்கிறார். இன்றும் இத் தமிழ்ப் பாடல்கள் திருமலை, திருப்பதி கோயில்களில் தமிழர்களால் சொல்லப்பட்டு வருகின்றன. திருப்பதி கோவில்களுக்குச் செல்லுகின்ற எவரும் தமிழ்நாட்டின் பூஜை முறைக்கும் இந்தக் கோயில்களின் பூஜை முறைக்கும் வித்தியாசம் காணமுடியாது. இப்படியிருக்க ஆந்திரர்கள் திருப்பதியைக் கேட்பது அபத்தமாகும்.

ஆங்கிலேயர் ஆட்சியில், பரிபாலன சௌகரியத்திற்காக, சமீபத்தில்தான், வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து சில பகுதிகளும் கடப்பை ஜில்லாவிலிருந்து சில பகுதிகளும் ஒன்று சேர்க்கப்பட்டு சித்தூர் ஜில்லா ஆக்கப்பட்டது. திருப்பதி, திருச்சானூர், திருக்காளத்தி, சித்தூர் முதலியவை பழைய வட ஆற்காடு ஜில்லாவிலிருந்தன. கந்த புராணம் புகழ் திருத்தணிகை தமிழகத்தைச் சேராமல் யாரைச் சேரும்? நாம் வேண்டுவது இதுவே. சித்தூர் ஜில்லாவைப் பிளந்து, பழையபடி சித்தூர் (ஊர்), திருப்பதி, திருக்காளத்தி முதலிய பிரதேசங்களை வட ஆற்காடு ஜில்லாவுடன் சேர்த்துவிட வேண்டும். இந்தப் 'பெரிய' வட ஆற்காடு ஜில்லா தமிழகத்தின் வடகோடி ஜில்லாவாக இருக்க வேண்டும்.

இப்பொழுது அப்பிரதேசங்களில் தமிழர்கள் ஏராளமாய் இருக்கின்றனர். அவர்களுக்குத் தமிழ் கற்க போதுமான அளவு வசதியில்லை. ஆயினும் அவர்கள் தமிழை விட்டார்களில்லை. இவர்கள் எண்ணுவதும் பேசுவதும் தாய்மொழியாகிய தமிழில்தான். இவர்கள் கலியாண சம்பந்தங்கள் வைத்துக் கொள்வதும் தமிழ்நாட்டினருடன்தான். அவர்களுடைய தமிழன்பு எவ்விதத்திலும் குறைந்ததில்லை.

சென்னை மாநகரில் பிறந்து வளர்ந்து, தமிழைப் பயின்ற எனக்கு, என் சொந்த ஊரும் தமிழகத்தின் பூர்விக எல்லையுமான திருவேங்கடம் என்றும் தமிழகத்தின் வட எல்லையாயிருக்கவேண்டும் என்ற அவா இருப்பதில் ஆச்சரியமில்லை. விஜயவாடா ஆந்திரர்களுக்கு எவ்வளவு சொந்தமோ, அவ்வளவு சொந்தம் சென்னை நகர் தமிழர்களுக்கு. பிரச்னை எல்லாம் இப்பொழுது தமிழ்த் திருப்பதியைப் பற்றித்தான். தமிழர்கள் யாவரும், கனம் மந்திரிமார்கள் உள்பட, கவனத்தைச் செலுத்தித் திருவேங்கடத்தை தமிழகத்தின் வட எல்லையாக நிலைநாட்டுவார்கள் என நம்புகிறேன்.

தியாகராயநகர்
21—3—49 தி. கு. ராஜகோபாலன்

○●○

பாதுகாக்க வேண்டும்

அமரகவி பாரதி நூல்களின் பிரசுர உரிமையும் அவர் பாடல்களின் ஒலி உரிமைகளும் பொதுச் சொத்தாகிவிட்டன என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். "பாரதி பாடல்கள் பொதுஜன சொத்தாகவில்லையே" என்று குறைப்பட்டுக் கொண்டிருந்த பாரதி அன்பர்களுக்கு இந்தச் செய்தி மகிழ்ச்சியளித்திருக்கும்.

மேற்படி உரிமைகள் தனிப்பட்ட நபர்களிடமிருப்பதை விடச் சர்க்காரிடம் இருந்தால் திறமையாக நிர்வகித்து நடத்த முடியும். பாரதியார் நூல்களை ஏராளமாகப் பதிப்பித்து லாபத்தைக் கருதாமல் மக்களுக்குக் குறைந்த விலையில் கொடுத்து எல்லோரும் பாரதியாரின் இலக்கியங்களைப் படித்து இன்புறச் செய்ய வேண்டும். இதற்கு அந்த உரிமைகள் சர்க்காரிடமிருக்கவேண்டியது அவசியம்.

பாரதி பாடல்களையும் பிற இலக்கியச் செல்வங்களையும் பாஷை வல்லுநர்களைக் கொண்டு பிற மொழிகளிலும் மொழிபெயர்த்து 'பாரதியின் புகழ் உலகமெலாம் பரவும் வகையைச் செய்ய' சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பாரதி பாடல்களை துஷ்பிரயோகம் செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இந்த விஷயத்தில் பொது மக்களும்—முக்கியமாக சர்க்காரும்—சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நம் தமிழ் டாக்கி ஒன்று போதுமே, பாரதியார் பாடல்களைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு. அவர் பாடல்களை மக்கள் உணர்ச்சியுடன் கேட்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கும் சினிமா பட முதலாளிகள் தாங்கள் தயாரிக்கும் ஆபாசமான—மக்கள் பார்ப்பதற்குக் கூசும்படியாக இருக்கும்-படங்களில் கூடப் புகுத்திவிடுவார்கள், சாக்கடை நீரில் சந்தனத்தைக் கலப்பதுபோல. இத்துடன் நின்றுவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா? அதுதானில்லை. தங்கள் இஷ்டம் போல் அவர் பாடல்களைக் கூட்டியோ குறைத்தோ 'கொலை' செய்தும் விடுவார்கள். நம் புராண இதிகாசங்கள் அவர்களிடம் மாட்டிக்கொண்டு எப்படி விழிக்கின்றன? இந்தக் கதி பாரதியார் பாடல்களுக்கும் இலக்கியங்களுக்கும் நேர்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது சர்க்காரின் முக்கிய பொறுப்பாகும்.

செங்கற்பட்டு
19—3—49 எம். காசிராஜன்

○●○

சென்னையில் சேருமா?

13—3—49 'கல்கி'யில் 'என்ன சேதி?' என்ற தலைப்பில் சென்னையில் சேருக என்ற விஷயத்தைப் பார்த்தேன். நான் திருவாங்கூர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன். திருவிதாங்கூர், கொச்சி இந்த இரண்டும் ஒரு யூனியனாகச் சேர்ந்து ஒரு மாகாணத்தினுடைய அந்தஸ்து பெற்றுவிட்டால் இங்கு வசிக்கிற தமிழர்கள் எல்லோரும் சென்னை மாகாணத்திலுள்ள தமிழ்நாட்டுக்கு ஓடிவர வேண்டியதுதான். இப்பொழுது இங்கு (அதாவது திருவாங்கூர்த் தமிழ்நாட்டில்) போலீஸ் ஆட்சிதான் நடக்கிறது. மலையாளிகள் பலருக்கும் ஆசை சென்னையில் சேரவேண்டும் என்பதுதான். ஏனென்றால் மலையாளத் தலைவர்களுடைய ஆட்சி அவ்விதம் ஊழல் மயமாக இருக்கிறது. இதனால் நம் சென்னை மாகாணத்திலுள்ள தமிழ்நாட்டுத் தலைவர்கள் திருவிதாங்கூரிலுள்ள தமிழ் மக்களின் நன்மையைக் கருதித் திருவிதாங்கூரைச் சென்னை மாகாணத்தோடு சேர்க்காவிட்டாலும் திருவிதாங்கூரிலுள்ள தமிழ்நாடாகிய தோவாளை, கல்குளம், விளவங்கோடு, அகஸ்தீசுவரம், செங்கோட்டை, தேவிகுளம் என்ற இந்த ஆறு தாலூக்காவையாவது சென்னை மாகாணத்துடன் இணைக்க முயல்வார்கள் என்று நம்புகிறோம்.

துவரங்காடு
13—3—49 க. அண்ணாமலைப் பிள்ளை

○●○

பாராட்டுகிறோம்!

ஆனந்த சுதந்திரத்தைக் காணுமுன்பே, கண்டுவிட்ட இன்பம் கொண்டு, பண்ணும் பாடிய பாவலன் பாரதியின் பாடல்களை நமது சென்னை சர்க்கார் உரிமையாக்கிக் கொண்ட செய்தி யாவருக்கும் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

நமது பிரதமரின் முயற்சியைப் பாராட்டுகிறோம். பாரதி பரம்பரை அவரை வாழ்த்துகிறது. இது போன்று, அவர் தமிழ் மொழிக்குப் பல அரிய சேவைகள் செய்வார் என நம்புகிறோம்.

பொதுமக்கள் இனிமேல்தான் சர்வ ஜாக்ரதையுடன் இருக்க வேண்டும். மட்டமான முறைகளில் பாரதியின் பாடல்களை உபயோகிக்கக் கூடாது. கண்ட துஷ்பிரசாரத்துக்குக் கவிகளைக் கையாளுதல் கூடாது. நமது மூவர்ணக் கொடிக்குக் கொடுக்கும் மதிப்பு பாரதிக்கும் அவருடைய பாடல்களுக்கும் தரவேண்டும்.

கோவை
13—3—49 ரா. பாலசுப்ரமணியன்


○●○

வரி வசூல் விஷயம்!

மார்ச்சு மாதம் 6-ந் தேதி "கல்கி" இதழில் பதினைந்தாம் பக்கத்தில் வெளியான "வரி வசூல் விஷயம்" என்ற கார்ட்டூன் சித்திரத்தைப் படித்தேன்.

என்னெய்க்கு வரி கொடுக்காவிடில் தண்ணீரை உபயோகிக்க வேண்டும் என்றிருந்தது. ஆனால் இப்பொழுது இருக்கும் தண்ணீர்க் கஷ்டத்தில், தண்ணீரை மட்டும் வரி இல்லாமல் எப்படி உபயோகிக்க முடியும்?

அமிஞ்சிக்கரை
20—3—49 எஸ். சீதாலக்ஷ்மி



"எஜமான்! ஏப்ரல் மாதத்திலே யிருந்து கார்டு-கவர் விலை ஏறப் போவுதுங்க! இப்பவே ஐம்பது ரூபாய்க்குக் கார்டு-கவர் வாங்கி வைத்துவிடட்டாங்க!"

"பலே பேஷ்! இந்த அருமையான யோசனை உனக்கு எப்படி அப்பா தோன்றிற்று?"

"எனக்கே தோன்றவில்லிங்க! ஒரு ஹாஸ்யப் பத்திரிகையிலே படிச்சேனுங்க!"

★ வட்ட மேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ 'தமிழ்நாட்டின் வட எல்லை' என்ற கடிதம் எழுதிய தியாகராயநகர் ஸ்ரீ தி. கு. ராஜகோபாலன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

தியாகராஜர் கல்லூரி, மதுரை

(சென்னை சர்வ கலாசாலையாரால் அங்கீகரிக்கப்படவேண்டியது)

மேற்படி கல்லூரியின் நிர்வாகஸ்தர் கீழ்க்காணும் உத்தியோகங்களுக்கு

18 - 4 - 49 திங்கட்கிழமை வரை மனுக்களை வரவேற்கிறார்

பிரதம விரிவுரையாளர் பதவிகள்: பாடங்கள்: ஆங்கிலம், தமிழ், கணிதம் பௌதிகம், ரஸாயனம், பொருளாதாரம். (ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொருவர்)

விரிவுரையாளர் பதவிகள்: பாடங்கள்: ஆங்கிலம், சம்ஸ்கிருதம், கணிதம், சரித்திரம், தர்க்கம் (ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொருவர்)

போதகர் பதவி: பாடம்: தமிழ்.

டெமான்ஸ்ட்ரேட்டர்கள் பதவி: பாடங்கள்: பௌதிகம், ரசாயனம். (ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவர்)

அங்கீகாரமான சர்வகலாசாலையில் படித்த பி. ஏ. (ஆனர்ஸ்), எம். ஏ., எம். எஸ்ஸி; பி. எஸ்ஸி (ஆனர்ஸ்) மட்டும் விண்ணப்பிக்கவும்.

தேகப்பயிற்சி டைரக்டர்கள் பதவி:

புத்தகசாலை பொறுப்பாளர் பதவி: (விசேஷ நூல்நிலையப் பயிற்சிகள் உள்ளவர்கள்)

தேவையான விவரங்கள்:

1. பிறந்த தேதி.
2. சொந்த ஊர்.
3. ஜாதி.
4. கல்வி யோக்யதாம்சங்கள் (தனித் தாளில் கீழ் காணும் விவரங்களைக் கொடுக்கவும். எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிக்குலேஷன் பாஸ் செய்த தேதி: படித்த பள்ளிக்கூடம். விசேஷ பாடங்கள் விவரங்களுடன்; இஷ்ட பாடங்கள், பாஸ் செய்த வகுப்பு. விசேஷமாகப் பாஸ் செய்திருந்தால் அதன் விவரம்)

   தமிழ், ஸம்ஸ்கிருத பாடங்களுக்கான மனுக்கள் மேற்கண்ட பூரா விவரங்களும் சமர்ப்பிக்க வேண்டும்.
5. இதுவரை பார்த்த உத்தியோகம், செய்த வேலை, கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு பார்த்த வேலைக்கு வாங்கிய சம்பளம்.
6. பொழுது போக்கு.
7. விளையாட்டுகளில் அடைந்த வெற்றிகள்.
8. ஹாஸ்டல் நிர்வாக அனுபவம்.
9. சொந்த செலவில் மதுரைக்கு வந்துபோக இயலுமா?
10. மூன்று நற்சாட்சிப் பத்திரங்களின் நகல்கள். ஒன்றாவது சமீபத்தில் பெற்றதாக இருத்தல் அவசியம்.

உத்தியோக நிபந்தனைகள்:

திருப்திகரமான இரண்டு வருஷ சேவைக்குப் பின் உத்தியோகம் ஊர்ஜிதம் செய்யப்படும். வழக்கம்போலுள்ள பஞ்சப்படி, பிராவிடெண்ட் பண்டு அளிக்கப்படும். பதவி ஏற்பவர்கள் ஸ்தாபனத்துடன் எழுத்து மூலம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மேலும் கல்லூரியின் எல்லா அலுவல்களிலும் முழுப் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும். உயர்ந்த பதவி உத்யோகம் கிடைக்காவிடில் அதற்கு அடுத்த கீழ்ப் பதவி ஏற்க சம்மதிப்பவர்கள் தங்களது விருப்பத்தை தெரிவித்துக் கொள்ளலாம். கல்லூரிப் படிப்பில் உயர்தர யோக்யதாம்சங்களுள்ளவர்களுக்கும் போதனைப் பயிற்சியில் நீண்டகால அனுபவமுள்ளவர்களுக்கும் விசேஷ சலுகை காட்டப்படும்.

தியாகராஜர் கல்லூரி
மதுரை

தி. மாணிக்கவாசகம்
நிர்வாகி

அலை ஓசை

கல்கி

மூன்றும் அத்தியாயம்

டாக்டரின் உத்தரவு

வண்டியிலிருந்து இறங்கியவர்கள் சீதாவும் சூரியாவும் சுண்டுவுந்தான். ஆனால் சூரியாவையும் சுண்டுவையும் லலிதா அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. அவர்களுடன் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுச் சீதாவின் கைகளைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு சென்றாள்.

"உன்னைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தேன். நம்முடைய கலியாணத்தின் போது நாம் இரண்டுபேரும் தனியாக உட்கார்ந்து போட்டோ எடுத்துக் கொண்டோம், பாரு! அதைப் பட்டுவுக்கும் பாலுவுக்கும் இப்பத்தான் காட்டிக் கொண்டிருந்தேன். பட்டு என் பெண்; பாலு என் பிள்ளை. அவர்களுக்கு உன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்டே யிருந்தேன். சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலில் வண்டி வந்து விட்டது. வண்டியில் யார் வந்திருப்பார்கள் என்று வெளியே வந்து பார்த்தால் நீ இறங்குகிறாய். என்ன அதிசயத்தைச் சொல்வது? சற்று முன்னாலேதான் போஸ்ட்மேன் கடிதம் கொண்டு வந்து கொடுத்தான். உன்னுடைய கடிதத்தோடு இவருடைய கடிதமும் வந்தது. இவர் உன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு அனுப்பியிருந்தார். நீ வருவதற்குள் நான் அங்கே வந்துவிட வேண்டுமென்று எழுதியிருந்தார். நீ புதுடில்லியிலும் கல்கத்தாவிலும் இருந்து நாகரிக வாழ்க்கை வாழ்ந்தவளாம். உன்னை உபசரிப்பதற்கு இவருக்குத் தெரியாதாம்! வேடிக்கையாக இல்லையா இவர் எழுதி யிருப்பது? நானும் உடனே திரும்பிவிடுவது என்றுதான் தீர்மானித்து அப்பாவிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். அப்பா உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார். இங்கே ஒரு தடவை உன்னை அனுப்பிவைக்கும்படி சொன்னார். நான் அனுப்புவதற்குள் நீயே வந்துவிட்டாய்!" என்று லலிதா அளவில்லாத ஆர்வத்தோடு வார்த்தைகளைக் கொட்டினாள்.

இதற்குள் அவர்கள் வீட்டுக் கூடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே குழந்தைகள் இருவரும் நின்று அதிசயத்துடனும் சங்கோசத்துடனும் சீதாவை ஏறிட்டுப் பார்த்தார்கள். "இவர்கள்தானே உன் குழந்தைகள்? பட்டுவும் பாலுவும்?" என்று சீதா கேட்டாள். "ஆமாம்; இவர்கள்தான்!" என்று லலிதா கூறிவிட்டுக் குழந்தைகளைப் பார்த்துச் சொன்னாள்:

"பார்த்தீர்களா? சீதா அத்தங்காளைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேனே? சொல்லி வாய் மூடுவதற்குள்ளே வந்துவிட்டாள். அத்தங்காள் ரொம்ப அழகாயிருப்பாள் என்று சொன்னேனோ, இல்லையோ? நான் சொன்னது நிஜமா இல்லையா என்று நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். சீதா! நீ ஜெயிலில் இருந்து இன்னும் எத்தனையோ கஷ்டங்களைப் பட்ட பிறகும் இவ்வளவு அழகாயிருக்கிறாயேடி! உன் அகத்துக்காரர் உன்னை விட்டு எப்படித்தான் பிரிந்திருக்கிறாரோ, தெரியவில்லை! அவருக்கு

நன்ருகச் சீமைப் பைத்தியம் பிடித் திருக்கிறது. சீமையில் இப்போது அப்படி என்ன அவசர வேலையாம்? அது போகட்டும். வஸந்தியை ஏன் நீ அழைத்துக்கொண்டு வரவில்லை?"

ஏற்கெனவே வாட்ட முற்றிருந்த சீதாவின் முகம் குழந்தை வஸந்தியைப் பற்றிக் கேட்டதும் அதிகமாகச் சுணக்கமுற்றது.

"வஸந்தி பள்ளிக்கூடம் போகிருள். அவளுடைய படிப்பைக் கெடுப்பானேன் என்று அழைத்துவரவில்லை. லலிதா! மாமா எங்கே? அவரைப் பார்க்க வேண்டாமா?" என்ருள்.

"பார்க்காமல் என்ன? பார்க்க வேண்டியதுதான். அப்பா சற்று முன்னுல்தான் உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். நீ வந்தது அவருக்குச் சந்தோஷமாயிருக்கும். அப்பாவுக்கு நேர்ந்த ஆபத்தைப்பற்றித் தெரியுமல்லவா, சீதா?.."

"தேவபட்டணத்துக்கு நேற்றைக்கு வந்ததும் தெரிந்தது. உன் அகத்துக்காரர் அம்மாஞ்சியிடம் சொன்னுராம். அதைக் கேட்டதும் மறு வண்டியில் புறப்பட்டோம். உன் அகத்துக்காரர் கூட ஒரு நாள் இருந்துவிட்டுப் போகலாமே என்று சொன்னுராம்......"

"சொன்னுராம் என்கிருயே? உன்னிடம் சொல்லவில்லையா? அவருக்குப் பொம்மனுட்டிகளைக் கண்டாலே ரொம்ப சங்கோசம். ஆனுல் உன்னிடம் அவருக்கு ரொம்ப மரியாதை. நீ தேசத்துக்காக ஜெயிலுக்குப் போயிருக்கிருய் என்று கேட்டது முதல் அடிக்கடி உன்னைப்பற்றி விசாரித்துக் கொண்டிருப்பார். இப்போது நீயே வந்துவிட்டாய். சீதா! உன் அகத்துக்காரர் சீமையிலிருந்து திரும்பி வரும் வரையில் தேவபட்டணத்தில் எங்கள் வீட்டிலேயே நீ தங்கியிருக்க வேண்டும். வேறு எந்த இடத்துக்கும் போகக் கூடாது. தெரிகிறதா?"

"அதைப்பற்றி இப்போது என்ன அவசரம், லலிதா! பிறகு சாவகாசமாகப் பேசிக்கொள்ளலாம். இப்போது மாமாவைப் போய்ப் பார்க்கலாம்!" என்ருள் சீதா.

இந்தச் சந்தர்ப்பத்தில் சரஸ்வதி அம்மாள் அங்கு வரவே, "அம்மா! இதோ சீதா அத்தங்கா வந்திருக்கிருள். பார்த்தாயா?" என்ருள் லலிதா.

"நமஸ்காரம், மாமி! சௌக்யமா?" என்று சீதா பவ்யமாகப் பேசினுள்.

சரஸ்வதி அம்மாளோ முகத்தைச் சுளுக்கிக்கொண்டு, "வந்தாயாடி, அம்மா! வா! என்னவெல்லாமோ கேள்விப்பட்டேன். மனதுக்கு அவ்வளவு சந்தோஷமாயில்லை. ஏதோ இந்த மட்டும் வந்து சேர்ந்தாயே? மாமாவுக்கு உடம்பு சரியாயில்லை என்று தெரியுமோ, இல்லையோ? யாராயிருந்தாலும் சரி, அவரிடம் அதிகமாக நச்சுப்பிச்சு என்று பேசக் கூடாது. டாக்டரின் உத்தரவு. புது மனுஷாளைக் கண்டால் அவருக்குத் தலைகால் தெரியாமல் போய்விடும். லலிதா! நான் சொல்கிறது தெரிகிறதா, இல்லையோ? அப்பா அதிகமாகப் பேசுவதற்கு இடங்கொடுக்க வேண்டாம்!" என்ருள்.

லலிதாவின் மனம் வேதனை அடைந்தது. அவள் கோபமாக அம்மாவைப் பார்த்தாள். அப்போது சீதா, "மாமி! நான் மாமாவிடம் அதிகமாகப் பேச்சுக் கொடுக்கவில்லை. உடம்பு சரியில்லாதவர்களோடு அதிகமாகப் பேசக் கூடாதென்று அவ்வளவு தூரம் தெரியாதா எனக்கு?" என்ருள்.

"உனக்குத் தெரியாமலிருக்குமா, அம்மா! நீ மெட்ராஸ், பம்பாய், டில்லி, கல்கத்தா—எல்லாப் பட்டணங்களிலும் இருந்தவள். நான் இந்தப் பட்டிக்காட்டிலேயே விழுந்து கிடக்கிறவள். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். இவருக்கு ஏதாவது கொஞ்சம் உடம்பு அதிகம் என்ருல் என் தலையிலேதானே விடிகிறது? வயது வேறே ஆகிவிட்டது. முன்னேயெல்லாம்போல் சக்கரமாகச் சுற்றிக் காரியம் செய்ய முடிகிறதா? யாராவது இரண்டுபேர் வீட்டுக்கு விருந்தாளிகள் வந்துவிட்டால் எப்படிச் சமாளிக்கப் போகிறேரும் என்று பயமாயிருக்கிறது. முன்னைப்போல சமைக்கப் பரிசாரகனுவது இருக்கிருனு? அதுவும் இல்லை. உன் மாமாவுக்குக் கடன் உடன் அதிகமாகப் போய்விட்டது. பரிசாரகன் வைத்துக் கொள்ளக் கட்டவில்லை!......"

"போதும், அம்மா! உன்னுடைய பஞ்சப்பாட்டை அப்புறம் பாடலாம். அத்தங்கா வந்ததும் வராததுமாக இதெல்லாம் எதற்காகச் சொல்லுகிறாய்? எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை! நீ வா, சீதா! மாமாவைப் போய்ப் பார்க்கலாம்!" என்று சொல்லிச் சீதாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனாள் லலிதா.

* * *

கிட்டாவய்யர் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் சூரியாவும் சுண்டுவும் உட்கார்ந்து அவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். லலிதாவும் சீதாவும் அறைக்குள் வந்ததும் அவர்கள் எழுந்தார்கள்.

"அத்தங்கா! அப்பாவுக்கு நான் வந்ததில்கூட அவ்வளவு சந்தோஷமில்லை. உன்னை அழைத்து வந்ததிலே தான் திருப்தி. உன் கதையையெல்லாம் அப்பாவுக்குக் கேட்க வேண்டுமாம்!" என்று சூரியா சொல்லி விட்டுச் சுண்டுவையும் அழைத்துக் கொண்டு போனான்.

மாமாவுக்குச் சீதா நமஸ்காரம் செய்தாள். அவர் உட்காரச் சொன்னதும் உட்கார்ந்தாள். கிட்டாவய்யரும் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து, சீதாவின் தலையை அன்புடன் தொட்டு, "மகராஜியாக இரு!" என்றார்.

மாமாவை அந்தப் பலவீனமான நிலைமையில் உடம்பில் காயக் கட்டுகளுடன் பார்த்ததினாலும் "மகராஜியாயிரு!" என்ற அவருடைய ஆசீர்வாதம் வேறுபல நினைவுகளை உண்டுபண்ணியதனாலும் சீதாவின் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

அந்தக் கண்ணீரின் காரணத்தைக் கிட்டாவய்யர் வேறு விதமாக அர்த்தம் செய்துகொண்டார். தம் மனையாள் சீதாவை வரவேற்றுச் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகள் அவருடைய காதிலும் விழுந்து அவருக்கு வருத்தத்தை உண்டுபண்ணியிருந்தன. எனவே அவர் உணர்ச்சி ததும்பிய குரலில், — "நீ வருத்தப்படாதே, சீதா! உன் மாமியின் சுபாவந்தான் தெரியுமே! உலகத்தில் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் உன் மாமி மட்டும் கொஞ்சங்கூட மாறாமல் அப்படியேயிருக்கிறாள்!" என்றார்.

சீதா கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "அதற்காக நான் வருத்தப்படவில்லை, மாமா! உங்களை இப்படிப் பார்த்ததும் எனக்குத் துக்கமாயிருந்தது. மாமி சொன்னதில் ஒரு குற்றமும் கிடையாது. நான் பிறந்த வேளை அப்படி!" என்றாள்.

"நீ பிறந்த வேளைக்கு என்ன வந்தது? திவ்யமான நாள் நட்சத்திரத்தில் நீ பிறந்தவள். உனக்கு மலைபோல் வரும் கஷ்டங்கள் எல்லாம் பனிபோல் நீங்கிவிடும். கொஞ்ச நாளில் எல்லாக் கஷ்டங்களும் நீங்கி நீ சௌக்யமாக இருப்பாய்" என்றார் கிட்டாவய்யர்.

"தங்களுடைய ஆசீர்வாதத்தினால் அப்படியே ஆகட்டும், மாமா! முதலில் தங்களுடைய உடம்பு சௌக்யமாக வேண்டும். உங்களை யாரோ அடித்து விட்டார்கள் என்று கேட்டதும் நான் துடித்துப் போய் விட்டேன். ஒரு ஈ, காக்காய்க்குக் கூடத் தீங்கு எண்ணாத தங்களை அடித்தவர்கள் எப்பேர்ப்பட்ட சண்டாளப் பாவிகளாய் இருக்க வேண்டும்?" என்றாள் சீதா.

"தலை விதி, அம்மா! தலை விதி! அதற்கு அவர்களைத் திட்டி என்ன பிரயோஜனம்? சீதா! ஒரு விஷயத்தைக் கேள். திருடர்கள் நான் வந்த வண்டியை வழிமறித்து அடித்தபோது ஒரு அடி படார் என்று மண்டையில் விழுந்தது. என் கதி கலங்கியது. அந்த நிமிஷமே உயிர் போய்விடும் போலத் தோன்றியது. அப்போது நான் என்ன நினைத்தேன் தெரியுமா? என் மனக்கண் முன்னால் யார் வந்தது என்று தெரியுமா? உன் தாயார் ராஜம்மாள்தான் வந்தாள். அவள் எங்கேயோ வானவெளியில் நின்று தன் மெலிந்த கரங்களை நீட்டி, 'அண்ணா! வாருங்கள்!' என்று என்னை அழைப்பது போலத் தோன்றியது. அப்போது நான், 'அடாடா! குழந்தை சீதாவைப் பார்த்துச் சொல்லிக் கொள்ளாமல் வந்துவிட்டோமே? சீதா சௌக்கியமா என்று இவள் கேட்டால் பதில் என்ன சொல்லுவது?' என்று நினைத்துக் கொண்டேன். இவ்வளவும் அடிபட்டுக் கலங்கிய ஒரு

நிமிஷ நேரத்தில் என் மனதில் நடந்தது!'' என்றார் கிட்டாவய்யர்.

"மாமா! இதிலிருந்து என்பேரிலும் அம்மாபேரிலும் உங்களுக்கு எவ்வளவு அன்பு என்று தெரிகிறது. ஆனால் நீங்கள் அதிகமாகப் பேச வேண்டாம். டாக்டர் உத்தரவுப்படி நடக்க வேண்டும் அல்லவா?'' என்றாள் சீதா.

"ஆமாம்; ஒரே மூச்சில் அதிகமாகப் பேசக்கூடாதுதான். உன்னைப் பார்க்க வேண்டும் என்றும் உன்னிடம் சில விஷயங்கள் சொல்ல வேண்டும் என்றும் எவ்வளவோ ஆவலாயிருந்தேன். உன்னைப் பார்க்க முடியாமலே போய் விடுமோ என்று பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீயே என்னைப் பார்ப்பதற்கு வந்து விட்டாய். மற்றதெல்லாம் இராத்திரி சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். நீ இப்போது போய்க் குளித்து விட்டுச் சாப்பிடு, அம்மா!'' என்று கிட்டாவய்யர் அருமையுடன் கூறினர்.

நாலாம் அத்தியாயம்

காதல் என்னும் மாயை

சீதாவும் லலிதாவும் அன்று சாயங்காலம் குளத்தங்கரை பங்களாவுக்குச் சென்றார்கள். 'பங்களா' வென்று அந்தக் கட்டிடத்தை முன்னே மரியாதைக்குச் சொல்லக்கூடியதா யிருந்தது. இப்போது அப்படிக்கூடச் சொல்வதற்கில்லை. அந்தக் கட்டிடத்தின் கூரையில் பல துவாரங்கள் காணப்பட்டன. கீழ்த்தரை குண்டும் குழியுமாயிருந்தது. சுவர்களின் மேல்பூச்சு பல இடங்களில் உதிர்ந்து போயிருந்தது. திண்ணைக்குப் பந்தோபஸ்தாகவும் அலங்காரமாகவும் அமைத்திருந்த மூங்கில் பிளாச்சு வேலி பல இடங்களில் முறிந்து விழுந்து கிடந்தது.

பங்களாதான் இப்படி என்றால், பங்களாவுக்கு எதிரில் இருந்த குளமும் களை குன்றிக் காணப்பட்டது.

குளத்தில் தண்ணீருக்குக் குறைவில்லை. ஆனால் முன்னொரு காலத்தில் கரையோரமாக வளர்ந்திருந்த அலரிச் செடிகளையும் செம்பருத்திச் செடிகளையும் இப்போது காணவில்லை. குளத்தின் படித்துறை பாசி பிடித்தும் இடிந்தும் காணப்பட்டது.


சீதாவும் லலிதாவும் குளக்கரையில் இடிந்த படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டார்கள். சிறிதுநேரம் சீதா சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டேயிருந்தாள். சுற்றுப்புறத் தோற்றத்தில் இன்னும் ஏதோ ஒரு வித்தியாசம் இருப்பதாக அவளுக்குத் தோன்றிக் கொண்டேயிருந்தது. பளிச்சென்று அது என்ன என்பது புலனாயிற்று.

"லலிதா! குளத்தின் மேலக்கரையில் இருந்த சவுக்கு மரத் தோப்பு எங்கே?'' என்று கேட்டாள்.

"அதை வெட்டி விறகுக்கு விற்றாகி விட்டது!'' என்றாள் லலிதா.

"அதனால்தான் இந்தப் பக்கமெல்லாம் இப்படிப் பார்ப்பதற்கு வெறிச்சென்று இருக்கிறது. சவுக்குத் தோப்பை வெட்டிவிட்டபடியால் இந்தக் குளக்கரையின் அழகே போய் விட்டது. இப்போது என்னுடைய வாழ்க்கை சூனியமாயிருப்பதுபோல் இந்தப் பிரதேசமும் சூனியமாயிருக்கிறது!'' என்று சொல்லிச் சீதா பெருமூச்சு விட்டாள்.

"நீ இப்படிப் பேசுவது எனக்குப் புரியவேயில்லை! டில்லியிலிருந்து நீ கடைசியாக எழுதிய கடிதங்களும் எனக்குச் சரியாக அர்த்தமாகவில்லை! உனக்கென்ன வருத்தம், சீதா? ஏன் இப்படி வாழ்க்கையையே வெறுத்தவள்போல் பேசுகிறாய்? அவருக்கும் உனக்கும் ஒத்துக்கொள்ளவில்லையா? இந்த ஊரில் நீங்கள் ஒருவரையொருவர் பார்த்துப் பிரியப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்டீர்களே? இந்தப் பக்கத்து ஊர்களிலெல்லாம் வெகு காலம் வரை உங்களுடைய காதல் கலியாணத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்களே? அதெல்லாம் வெறும் பொய்யா? உங்களுக்குள் ஏன் ஒத்துக் கொள்ள வில்லை? உண்மையில் அவருக்கு உன் பேரில் அன்பு இல்லையா?'' என்று லலிதா வருத்தமான குரலில் கேட்டாள்.


சந்திரா

"எனக்குத் தெரியாது. அவருக்கு என் பேரில் அன்பு இருக்கிறதா இல்லையா என்பதே எனக்குத் தெரியாது. ஆரம்பத்திலிருந்தே அவருக்கும் எனக்கும் மத்தியில் ஒரு மாயத் திரை தொங்கிக் கொண்டிருந்தது. அவருடைய மனதை நான் அறிய முடியாமல் அந்தத் திரை மறைத்துக் கொண்டிருந்தது. அந்தத் திரையைத் திறந்து அவருடைய மனதில் உள்ளது என்ன வென்பதை அறிந்துகொள்ள நான் பிரயத்தனப்படவேயில்லை. அந்தத் தைரியம் எனக்கு இல்லை. திரையைத் திறந்து பார்த்தால் உள்ளே என்ன இருக்குமோ என்னமோ என்று பயந்தேன். பேய் பிசாசு இருக்குமோ, புலியும் கரடியும் இருக்குமோ, அல்லது விசுவாமித்திரரை மயக்கிய மேனகையைப் போல யாராவது ஒரு மாய மோகினி இருப்பாளோ என்று எனக்குப் பயமாயிருந்தது. ஆகையினால் திரையை நீக்கி அவருடைய மனதை அறிந்து கொள்ள நான் பிரயத்தனப் படவேயில்லை. அப்படிப் பிரயத்தனப் பட்டிருந்தால் ஒரு வேளை நான் கொலைகாரியாகியிருப்பேன். அல்லது கொலையுண்டு செத்துப் போயிருப்பேன்!" என்றாள் சீதா.

"நீ பேசுவது மர்மமாகவும் பயங்கரமாகவும் இருக்கிறது, லலிதா! நமக்குக் கலியாணம் ஆன புதிதில் இதே இடத்தில் நாம் உட்கார்ந்து எத்தனை நாள் பேசிக்கொண்டிருந்திருக்கிறோம்? அவர் உன்னிடம் வைத்த காதலைக் குறித்து எவ்வளவு பூரிப்புடன் பேசிக் கொண்டிருந்தாய்? அதையெல்லாம் கேட்கக் கேட்க எனக்கும் எத்தனையோ சந்தோஷமாயிருந்தது. என்னுடைய கணவர் என்னிடம் அப்படியெல்லாம் இல்லையே என்றெண்ணி ஏமாற்றமும் அடைந்தேன். இப்போது நீ பேசுவதைப் பார்த்தால் எல்லாம் பொய் என்று தோன்றுகிறது. இந்த உலகமே மாயை என்று பெரியவர்கள் சொல்லுவது உண்மைதான் போலிருக்கிறது" என்று லலிதா கூறினாள்.

"அதில் சந்தேகமில்லை, லலிதா! பெரியவர்கள் இந்த உலகத்தை 'மாய உலகம்' என்று சொல்லுவது சரிதான். இந்த மாய உலகத்தில் காதல் ஒன்றுதான் உண்மையானது என்று சிலர் சொல்லுவதுண்டு. நாவல்களிலும், நாடகங்களிலும், சினிமாக்களிலும் இப்படிச் சொல்வார்கள். அதைப் போல மூடத்தனம், பைத்தியக்காரத்தனம் — வேறொன்றும் கிடையாது. இந்த மாய உலகத்தில் எத்தனையோ மாயைகள் இருக்கின்றன. எல்லா மாயைகளிலும் பெரிய மாயை காதல் என்பதுதான். என்னுடைய பெண்ணுக்கும் உன்னுடைய பெண்ணுக்கும் கொஞ்சம் வயதாகும்போது, அதுவரை நான் உயிரோடிருந்தால், அவர்களிடம் சொல்லப் போகிறேன். 'கதைகளைப் படித்துவிட்டும் நாடகங்களையும் சினிமாக்களையும் பார்த்துவிட்டும் காதல், கீதல் என்று பைத்தியக்கார எண்ணம் எண்ணிக் கொண்டிராதீர்கள். பெரியவர்கள் பார்த்துச் செய்துவைக்கும் கலியாணத்திலேதான் வாழ்க்கை முழுதும் சந்தோஷமாயிருக்கலாம்' என்று சொல்லப் போகிறேன். காதல் என்பது வெறும் மாயை என்பதற்கு என்னையே உதாரணமாகக் காட்டப் போகிறேன்."

"சீதா! உன்னுடைய பேச்சில் எனக்கு இன்னமும் நம்பிக்கை உண்டாகவில்லை! ஏதோ ஒரு பெருந் துக்கத்தினால் அல்லது மனக் கசப்பினால் இப்படிப் பேசுகிறாயோ என்று நினைக்கிறேன். காதல் என்பது மாயை என்றும் பொய் என்றும் சொல்கிறாயே? ஆனால் அந்தச் சமயத்தில், நமக்குக் கல்யாணம் ஆகும் சமயத்தில், நீ அநுபவித்த சந்தோஷமெல்லாம் பொய் என்று சொல்ல முடியுமா? இந்தக் குளக்கரையில் உட்கார்ந்து நீ சொன்னதெல்லாம் எனக்கு அப்படியே ஞாபகம் இருக்கிறது. அவருடைய பெயரைச் சொன்னால் உன் உடம்பு எப்படிப் பூரித்தது என்பதெல்லாம் எனக்கு நேற்று நடந்ததுபோல் ஞாபகத்துக்கு வருகிறது. அதெல்லாம் வெறும் பொய் என்பதாக நான் இன்னமும் நம்ப முடியவில்லை."

"நீ மட்டும் என்ன? என்னால்கூட நம்ப முடியவில்லைதான், லலிதா! அதையெல்லாம் நினைத்தால் இப்போதுகூட என் உடம்பு சிலிர்க்கிறது. முதன் முதலில் அவரும் நானும் பார்த்துக் கொண்ட பிறகு, எங்களுடைய ஆசையை வெளியிட்டுக் கொண்ட பிறகு, இந்தப் பூவுலகம் எனக்குச்

சொர்க்கலோகமாக மாறி யிருந்தது. அவர் முதன் முதலில் என் கரத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்ட பிறகு, அவருடைய காதலைச் சொல்லி விட்டு நான் சற்றும் எதிர்பாராத நிலையில் என் கன்னத்தில் கன்னி முத்தம் ஈந்தபிறகு, என்னுடைய மனித ஜன்மம் மாறித் தேவகன்னிகை ஆகியிருந்தேன். அந்த நாட்களில் வானத்து நட்சத்திரங்கள் எல்லாம் என் தேகத்தை அலங்கரித்தன. பூலோகத்துப் புஷ்பங்கள் எல்லாம் என் உடம்பில் மலர்ந்து மணம் வீசின. சந்திரகிரணங்கள் என் தேகத்தை மூடும் சல்லாத்துணி ஆயின. தென்றல் காற்று என் மேனியைக் குளிர்விப்பதற்காகவே வீசிற்று. சந்தனம் எனக்காகவே கந்தம் அளித்தது. நான் அணிந்த பட்டுப் புடவைகள் என்னுடைய மேனியின் அழகினால் சோபை பெற்று விளங்கின. இதையெல்லாம் நானே உணர்ந்தேன், லலிதா! அவ்வளவும் அப்போது உண்மையாகத் தான் தோன்றியது. 'மாயை' என்றோ 'பொய்' என்றோ ஒரு கணமும் நான் நினைக்கவில்லை. அவர் என்னிடம் அந்த நாளில் வைத்திருந்த ஆசையைத் தான் என்னவென்று சொல்லுவேன்? தமயந்தியிடம் நளன் வைத்த ஆசையும் ஜூலியட்டிடம் ரோமியோ வைத்த ஆசையும் லைலாவிடம் மஜனூன் வைத்த ஆசையும் அவர் என்னிடம் வைத்திருந்த ஆசைக்கு இணையாகாது என்றே தோன்றியது. கதைகளில் வரும் அந்தக் காதலர்களின் காதலையும் என்னிடம் என் கணவர் வைத்திருந்த காதலையும் ஒப்பிட்டுப் பார்த்து அவர்களைவிட நானே அதிர்ஷ்டசாலி என்று நினைத்து மகிழ்ந்தேன். அவரும் நானும் தங்கத் தோணியிலே ஏறிக்கொண்டு கரைகாணாத கடலில் மிதந்து மிதந்து மிதந்து போய்க் கொண்டிருந்தோம். எங்கள் இன்பப் பிரயாணத்துக்கு முடிவே கிடையாது என்று தோன்றியது. வெள்ளிநிற அன்னப் பறவைகள் பூட்டிய புஷ்பக விமானத்தில் ஏறிக்கொண்டு நாங்கள் நீல வானத்தில் நட்சத்திர மண்டலங்களுக்கிடையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தோம். எங்களுடைய ஆனந்த யாத்திரைக்கு அந்தமே கிடையாது என்று எண்ணினேன். ஆனால் ஒரு நாள் அதற்கு முடிவு வந்தே விட்டது. உன்னையும் என்னையும் போல் பெண்ணாய்ப் பிறந்தவள் ஒருத்தி வந்து எங்கள் ஆனந்த வாழ்க்கையில் குறுக்கிட்டாள். அந்த நிமிஷத்தில் சனியன் பிடித்தது. அவருடைய மனம் பேதலித்தது. என்னுடைய சொர்க்கம் ஒரு நொடிப் பொழுதில் நரகமாக மாறியது. லலிதா! நான் வங்க நாட்டுச் சிறையில் இருந்த போது ஒரு பாடலைக் கேட்டேன். அது என் மனதை ரொம்பவும் கவர்ந்தது. என் மனதில் உற்சாகம் குன்றித் துயரம் ஏற்படும்போதெல்லாம் அதைப் பாடுவேன். உனக்கு அதை இப்போது பாடிக் காட்டட்டுமா?" என்றாள் சீதா.

"பேஷாய்ப் பாடு! கேட்கவும் வேண்டுமா? நீ பாடுவது எனக்கு எப்போதுமே பிடிக்குமே! அது வங்காளி பாஷைப் பாட்டா?" என்றாள் லலிதா.

"நான் கேட்டது வங்காளிப் பாட்டுத்தான்; ஆனால் அதை நானே தமிழ்ப்படுத்தினேன்; கேள்!" என்று சொல்லி விட்டுச் சீதா துயரம் ததும்பிய வர்ண மெட்டில் பின்வரும் பாட்டை உருக்கமாகப் பாடினாள்:—

"பாற்கடல் மீதினில் பசும்பொன் படகினில்
பரிந்தேற்றிச் சென்றவர் யார்?—என்னைப்
பரிந்தேற்றிச் சென்றவர் யார்?

காற்றங்கு அடித்திட கடல் பொங்கும் வேளையில்
கைவிட்டுச் சென்றவர் யார்?—சகியே!
கைவிட்டுச் சென்றவர் யார்?

வான வெளியினில் தேனிலவு தன்னில்
தாரகை நின்றவர் யார்?—சகியே
தாரகை நின்றவர் யார்?

தாரகை நின்றேனைத் தாவி அணைத்துப் பின்
தனியாக்கிச் சென்றவர் யார்?—என்னைத்
தனியாக்கிச் சென்றவர் யார்?"

இந்தப் பாட்டைப் பாடிவிட்டுச் சீதா விம்மி விம்மி அழத்தொடங்கினாள். லலிதா அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு பலவிதமாக ஆறுதல் கூறினாள். அவ்விதம் ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும்போதே லலிதா தன் மனதிற்குள் "ஐயோ! பாவம்! என்னவெல்லாமோ கஷ்டங்களை அநுபவித்து இவளுடைய மூளையில் கொஞ்சம் கோளாறு உண்டாகி யிருக்கிறது!" என்று எண்ணிக் கொண்டாள்.

I. N. E.

இந்திய தேசியக் கண்காட்சி

ஆஸாத் மைதானம், பம்பாய்

★

பம்பாய் நகரம், பம்பாய்க்குச் சுற்றுப் பக்கம், பூனா, ஆமதாபாத், பரோடா, சூரத் முதலிய ஊர்களிலிருந்து வியாபார நிமித்தமாக ஆயிரக்கணக்கானவர்கள் விஜயம் செய்வார்கள். முக்கியமான ஊர்களிலிருந்து வியாபாரத் துறைகளிலுள்ளவர்களும் மாணவர்களும் விஜயம் செய்வதற்கென விசேஷ போக்குவரத்து சாதனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

★ ★

இந்தியா யுனைடெட் மில்ஸ், லிப்டன்ஸ் லிமிடெட், ஹிந்துஸ்தான் ப்ளாஸ்டிக்ஸ், போனிக்ஸ் மின்சார விசிறி கம்பெனியார், பாடா கம்பெனியார், அமிர்தாஞ்சன் லிமிடெட், குவாலியர் டெக்ஸ்மாகோ, ஹிந்துஸ்தான் மின்சார விசிறி கம்பெனியார், ஹாஃப்னி இண்டஸ்ட்ரீஸ், வஜீரலி லிமிடெட், அம்ருல் லிமிடெட் மற்றும் அநேக வியாபாரிகளும் உற்பத்தியாளர்களும் மேற்படி கண்காட்சியின்போது ஒவ்வொரு நாளும் உங்களை வரவேற்பார்கள்.

★ ★

பிரிட்டிஷ், யு. எஸ். ஏ. அறிக்கை ஸ்தாபனங்கள், பம்பாய் முனிஸிபாலிடி மற்றும் சர்க்கார் ஸ்தாபனங்கள் ஆகியவை, விஜயம் செய்பவர்களுக்குக் கல்வி சம்பந்தமான சினிமாப் படங்களைக் காட்டுவார்கள்.

★ ★

கைத்தொழில்காரர்கள், சேவாளர்களுக்கென பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி, ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகள் பம்பாய், ரிலீப் & ரிகாபிலேஷன் டைரக்டர், மற்றும் இதர நன்கொடையாளர்களாலும் இலவச ஸ்டால்கள் ரிஸர்வ் செய்யப்பட்டிருக்கின்றன.

★ ★

1949 இந்திய தேசியக் கண்காட்சி, 23—4—49 முதல் ஒரு மாதம் நடக்கும். வியாபாரம், தொழில் முதலிய துறைகளில் வெகு நூதனமான பொருள்களைக் கண்காட்சியில் காணலாம். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழில் ஸ்தாபனங்களை இந்த மகத்தான கண்காட்சியில் கலந்துகொள்வதுடன் பங்கெடுத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம். மில் சொந்தக்காரர்களுக்கும், தொழில் ஸ்தாபனங்களுக்கும், வியாபாரிகளுக்கும் இது ஒரு அரிய சந்தர்ப்பம்.

★ ★


ஸ்டால்கள் 10'x10' விஸ்தீரணம், ஒவ்வொன்றும் முறையே ரூ. 250/- ரூ. 200/- ஆகும். பாவிலியன்கள், 20'x20' விஸ்தீரணம், ஒவ்வொன்றும் ரூ. 800/- ஆகும். ஸ்டால் எடுத்துக் கொள்பவர்களுக்கும் அவர்களது சிப்பந்திகளுக்கும் உணவு, தங்குமிடம் ஆகிய வசதிகள் செய்து தரப்படும்.

உற்பத்தியாளர்களே! வியாபாரிகளே!

உடனே ஸ்டால்களை எடுத்துக் கொள்ளுங்கள்

கண்காட்சிக்காரர்கள், விசேஷக் காட்சிப் பொருள்கள், மற்றும் இதர விவரங்களடங்கிய அட்டவணைகள் கிடைக்குமிடம்:—

இந்திய தேசிய கண்காட்சி ஆபீஸ், கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங், ஸர். பிரோஸ்ஷா மேத்தா ரோடு, பம்பாய்.



பெற்றோர் விழா

பகீரதன்

பெண் குழந்தைகளைப் பெற்றவர்கள் அதைக் குறித்துக் கவலைப்படுவதும் கஷ்டப் படுவதும் ஒரு காலத்தில் வழக்கமா யிருந்தது. "ஐந்து பெண்களைப் பெற்றால் அரச னும் ஆண்டியாவான்!" என்ற பழமொழியைப் பெண்களைப் பெற்றவர்கள் ஒருவருக் கொருவர் சொல்லிக் காட்டிக் கொண்டு ஆறுதல் பெறுவார்கள்.

இதற்கு நேர்மாறாக, "பெண்களைப் பெற்றவர்கள் குதூகலமாக விழாக் கொண்டாடு கிறார்கள்" என்ற அதிசயமான செய்தியைச் சில நாளைக்கு முன் கேள்விப்பட்டேன். கானது மார்ச்சு 6உ 'கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகரந் தன்னில்' அந்த அதிசயம் நடைபெற்றது. அதைப் பார்ப்பதற்காகவும் அந்த விழாவில் கலந்து கொள்வதற்காகவும் சென்னையிலிருந்து காஞ்சி புரத்துக்குச் சிலர் சென்றார்கள். அவர்களுடன் நானும் போயிருந்தேன்.

* * *

சென்னையிலிருந்து சென்றவர்கள் மோட்டார் அண்டு ஜெனரல் டிரேடிங் கம்பெனியின் அதிபர் ஸ்ரீ டி. எஸ். சுந்தரம் ஐயர், கிழு வைஷியாடிக் கம்பெனியின் மானேஜர் ஸ்ரீ அ. சுப்பையா, ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார், "கல்கி" மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ சதாசிவம், "கல்கி" ஆசிரியர் முதலியோர். இவர்களைக் காஞ்சியில் டாக்டர் பி. எஸ். சீனிவாசனும் டாக்டர் பி. ஆர். ரகுராமனும் வரவேற்றுப் பெற்றோர் விழா நடைபெற்ற பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் சென்றார்கள்.

காஞ்சிபுரத்தில் முக்கிய விசேஷம் அந்நகரிலுள்ள புராதனமான ஆலயங்கள். அடுத்தபடியான விசேஷம், டாக்டர் பி. எஸ். சீனிவாசன் அவர்கள் என்று சொல்ல வேண்டும்.

ஏகாம்பரர் சந்நிதி வாசலில் உள்ள இரண்டு உன்னதமான மண்டபங்களைப் பார்த்த சென்னை நண்பர் ஒருவர், "இந்த மண்டபங்கள் கட்டப் பட்ட காலம் என்ன?" என்று கேட்டார். இதற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. அப்போது "கல்கி" ஆசிரியர் சொன்னார்:—"டாக்டர் பி. எஸ். சீனிவாசன் எத்தனை வருஷமாக இந்தக் காஞ்சி நகரசபைக்குத் தலைவராயிருக்கிறார் என்று கேட்டால், சட்டென்று யாராவது பதில் சொல்ல முடியுமா? அது மாதிரியே இந்த மண்டபங்களின் காலத்தைக் கணிப்பதும் கடினமான காரியந்தான்!"

இவ்வாறு காஞ்சி வாசிகளின் நீடித்த அபிமானத்துக்குப் பாத்திரமாகிப் புராதன காலத்திலிருந்து நகரசபைத் தலைவரா யிருந்து வரும் டாக்டர் பி. எஸ். சீனிவாசன் இப்போது சென்னை மாகாணத்தின் முதியோர் சட்டசபைக்குக் காங்கிரஸ் அபேட்சகராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

டாக்டர் ரகுராமன், திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ராஜாஜியின் தலைமையில் தொண்டு வாழ்க்கையை ஆரம்பித்தவர். காஞ்சிபுரத்துக்கு அருகில் உள்ள ஹரிஜன் ஆசிரமத்தை நடத்தி வருகிறார். கொஞ்ச காலத்துக்கு முன்பு காஞ்சிபுரம் சோமசுந்தர கன்யா வித்தியாலயத்தின் காரியதரிசிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இரவு பகல் கஷ்டப்பட்டு, படாதபாடெல்லாம் பட்டு, அந்தப் பெண்கள் ஹைஸ்கூலை நடத்திக் கொண்டு வருகிறார். டாக்டர் ரகுராமன் அவ்வளவு கவலையும் கஷ்டமும் பட்டு வருவதின் காரணமாக, மேற்படி பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண் குழந்தைகளின் பெற்றோர்கள் குதூகலமாக விழாக் கொண்டாடுவது சாத்தியமா யிருக்கிறது. அந்த விழாவைக் கண்டு களிப்பதற்காகத் தான் நாங்கள் போயிருந்தோம்.

* * *

மாலை 4-30 மணி.

சுதந்திர இந்தியாவின் மணிக்கொடிக் கம்பத்தின் எதிரே பெண் குழந்தைகள் வரிசை வரிசையாக அணிவகுத்து நின்றார்கள். கவியரசர் பாரதியாரின் "விடுதலை! விடுதலை! விடுதலை!" என்ற சுதந்தர கீதத்தைப் பாடிக்கொண்டு கொடிக் கம்பத்தை நோக்கி ஒருவர்பின் ஒருவராக நாலுபேர் நடை நடந்து வந்தார்கள். கொடி மரத்தின் அருகில் வந்ததும் அந்த இளம் பெண்கள் ஒருவர் மாற்றி ஒருவர் வலது பக்கமாகவும் இடது பக்கமாகவும் பிரிந்து சென்றார்கள். பிரிந்து சென்றவர்கள் சிறிது நேரத்துக்

கெல்லாம் இரண்டு இரண்டுபேராக ஜண்டை வரிசையில் வந்தார்கள். மறுபடியும் பிரிந்து சென்று நாலு நாலு பேராக வந்தார்கள். திடீரென்று கலைந்து வட்ட வடிவமாக நின்று சுற்றிச் சுழன்றார்கள். அப்படிச் சுழன்றபோது பலவித சித்திர விசித்திர மான கோலங்களாகத் தோன்றிக் காட்சி அளித்தார்கள். பிறகு அணி அணியாகப் பிரிந்து நின்று கொடி மரத்துக்கு மரியாதை செய்தார்கள். அருமையான காட்சி! அந்தச் சிறு பெண்களிடம் எத்தனை சுருசுருப்பு! எவ்வளவு கட்டுப்பாடு! எவ்வளவு ஒழுங்கு!

ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் தாயின் மணிக்கொடியைக் கொடி மரத்தின் உச்சியில் ஏற்றினார். மூவர்ணக் கொடி கம்பத்தின் உச்சிக்குச் சென்றதும் அதிலிருந்த முடிச்சு அவிழ்ந்து மலர்மாரி பொழிந்தது. அதே சமயத்தில் 'டுமீர்' 'டுமீர்' என்று காமாட்சி அம்மன் கோயிலி லிருந்து அதிர்வேட்டுக் கிளம்பியது.

பின்னர் பெண்மணிகள் எல்லாரும் சேர்ந்து தாயின் மணிக்கொடியின் புகழைப் பாடினார்கள். பிறகு பாரத மாதாவின் பெரு மையைப் பாடி நான்கு பெண் குழந்தைகள்



மருமகள் (அழுதுகொண்டே):— அம்மா, உங்கள் பிள்ளை கண்டபடி யெல்லாம் பேசுகிறார். 'எங்கேயாவது ஆற்றில் குளத்தில் விழுந்து தொலை' என்கிறார்.

மாமியார்:— அவன்தான் கோபக்காரன் என்று உனக்குத் தெரியுமே? அவன் சொல்லுகிறபடி நான் செய்துவிட்டேன்!

அபிநயம் பிடித்து வணங்கினார்கள். பின்னர் தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக ஓயாமல் உழைத்த உத்தமர்களான மகாத்மா காந்தி, ஜவாஹர்லால், ராஜாஜி, பட்டேல், சுபாஷ் சந்திரபோஸ், ராஜேந்திர பிரஸாத் முதலிய தியாக மூர்த்திகளின் பெருமையைப் பாடி வணக்கம் செலுத்தினார்கள். பின்னர் அனை வரும், விழாக் கொண்டாட்டத்துக்காக அமைத்த அரங்கமேடைக்குச் சென்றார்கள்.

ஸ்ரீ ட்ரோஜன் அண்ணாமலைச் செட்டியார் விழாக் கூட்டத்துக்குத் தலைமை வகித் தார். பெண் கல்வியின் அவசியத்தைப் பற்றி யும் பெண்மணிகளின் முன்னேற்றத்தைப் பற்றியும் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கும் டாக்டர் சுந்தராமன் டாக்டர் சீனிவாசன் ஆகிய இரண்டு டாக்டர்களின் உழைப்பைப் பற்றியும் பேசினார். பிறகு செங்கற்பட்டு ஜில்லாக் கலெக்டர் ஜனாப் அப்துல் சத்தார் அவர்கள் தமிழ்ப் பரீட்சைகளில் தேறிய கன்யா வித்யாலயத்துப் பெண்களுக்குத் திருநெல்வேலி ஜில்லாக்காரர்கள் கொடுத்த வெள்ளிக் கோப்பைகளையும் பரிசுப் பத்திரங் களையும் வழங்கிவிட்டு ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் அழகாகப் பேசினார்.

கன்யா வித்யாலயத்தின் மாணவிகள் சுமார் இருபது விதமான கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பித்துப் பெற்றோர் விழாவில் கலந்துகொண்ட பெற்றோர்களையும் மற்ற வர்களையும் மகிழ்வித்தார்கள். பிரசங்கம், நடனம், அபிநயம், நாடகம், கும்மி, கோலாட்டம், நவீன மலர் மாலை டிரில் முதலிய பலவிதமான நிகழ்ச்சிகளை சுமார் ஒருமணி நேரத்துக்கு மேல் உத்ஸாகமாக நடத்திக் காண்பித்தார்கள்.

சுமார் ஆயிரம் குழந்தைகளும் ஆயிரம் பெரியவர்களும் (ஆண்களும் பெண்களும்) சபையில் இருந்தபடியால், இத்தனை நேரமும் கொஞ்சம் கூச்சலும் சத்தமும் இருந்தன. "கல்கி" ஆசிரியர் எழுந்து, அமெரிக்காவில் நயாகரா நீர்வீழ்ச்சியைப் பெண்கள் பார்க்கப்போன கதையைச் சொன் னதும் எழுந்த குதூகலமான சிரிப்பில், சத்த மும் கூச்சலும் அடியோடு அடங்கி விட்டன.

பிறகு, "கல்கி" ஆசிரியர் சொன்னார்:— "பள்ளிக்கூடங்களில் ஆண்பிள்ளைகளுந்தான் படிக்கிறார்கள். என்ன பிரயோஜனம்? படித்துப் பரீட்சை எழுதுவதோடு சரிதான். இந்தக் கன்யா வித்யாலயத்தைச் சேர்ந்த பெண்களோ படிக்கவும் படிக்கிறார்கள். அதோடு ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், இங்கி லீஷிலும் ஹிந்தியிலும் பிரசங்கம் செய்

கிறார்கள், டிரில் செய்கிறார்கள், உபதேசம் செய்கிறார்கள், கிருஷ்ணபகவானாக வருகிறார்கள், குசேலராகத் தோன்றுகிறார்கள், பாண்டிய மன்னராக அரியாசனத்தில் அமர்கிறார்கள், கண்ணகியாகத் தோன்றிப் பாண்டிய மன்னனை கடு நடுங்க வைக்கிறார்கள், திடீரென்று கீழே விழுந்து சாகிறார்கள், உடனேயே உயிர் பிழைத்து உள்ளே ஓடி விடுகிறார்கள்!”

இவ்வாறு பெண் குழந்தைகள் நடத்திய நிகழ்ச்சிகளைப் பாராட்டிய கல்கி ஆசிரியர், பின்னர் அந்த விழாவில் கூடியிருந்த அத்தனை பேரையும் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் அழைத்துச் சென்றார். அந்தப் பழைய காலத்தில் கல்வியில் நிகரற்று விளங்கிய காஞ்சிமாநகரத்தையும், அதன் பெருமையைப் பாடி நிலைபெறும்படி செய்த அப்பர் சுவாமிகளையும், காஞ்சியில் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய கலைக்கூடங்களையும், கல்வி பீடங்களையும், சிற்ப அற்புதங்களையும் காட்டினார். ஸ்ரீமதி சரோஜனிதேவி முப்பது வருஷங்களுக்கு முன்னால் காஞ்சிபுரத்தில் நடந்த அரசியல் மகாநாட்டுக்குத் தலைமை வகித்ததை நினைவூட்டினார். அவர் காலஞ் சென்றதைக் குறிப்பிட்டுத் துயரம் காட்டினார். ‘இந்த சோமசுந்தர கன்யா வித்யாலயத்துப் பெண்களில் எத்தனையோ சரோஜனிதேவிகள் தோன்றலாம்’ என்று சொல்லி உற்சாகப் படுத்தினார். புதுமைப் பெண்களின் பெருமையைப் பற்றிக் கவியரசர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்,

“சாதம்படைக்கவும் செய்திடுவோம் தெய்வச்
சாதிபடைக்கவும் செய்திடுவோம்”

என்று பாடியிருப்பதை நினைவூட்டி, “இந்தப் பள்ளிக் கூடத்தில் படிக்கும் பெண் குழந்தைகள் குடும்ப நிர்வாகத்தை நன்கு நடத்தவும் பயிற்சி பெறவேண்டும்; தேசப்பணி செய்யவும் தகுதி அடைய வேண்டும்!” என்றார்.

“இன்று நடந்த வைபவங்களைப் பார்த்த பிறகு, சர்க்காருக்கு ஒரு யோசனை சொல்லத் தோன்றுகிறது. இத்தனை காலும் ஆண் பிள்ளைகளின் படிப்புக்கே சர்க்கார் ஏராளமாகப் பணம் செலவழித்து வந்திருக்கிறார்கள். வருகிற பத்து வருஷத்துக்கு ஆண் பிள்ளைப் பள்ளிக்கூடங்கள் எல்லாவற்றையும் மூடிவிட்டுப் பெண் குழந்தைகளின் படிப்புக்கே சர்க்கார் பணம் செலவழிக்க வேண்டும்!” என்று கல்கி ஆசிரியர் கூறியபோது, டாக்டர் சீனிவாசன் அவர்கள் உரத்த குரலில் “ஹியர்! ஹியர்! ஹியர்!”



நோயாளி:—டாக்டர், டாக்டர்! இதோ என் உயிர் போய்க் கொண்டிருக்கிறது!

டாக்டர்:—அது போனால் போகட்டும்! நான் பார்த்துக் கொள்ளுகிறேன்; நீங்கள் அப்படியே சும்மாப் படுத்திருங்கள்!

என்று கோஷித்தார்கள். “டாக்டர் சீனிவாசன் எவ்வளவுதான் சத்தமிட்டுக் கத்தினாலும் சர்க்காரின் செவிட்டுக் காதில் இந்தச் சங்கநாதம் கேட்கப் போவதில்லை. ஆகையால் சர்க்காரை நம்பியிராமல் பொது மக்கள் தான் இந்த அருமையான ஸ்தாபனத்துக்குப் பொருளுதவி செய்யவேண்டும்” என்று கல்கி ஆசிரியர் வேண்டிக்கொண்டார்.

பிற்பாடு பேசிய டாக்டர் சீனிவாசன் அவர்களும் டாக்டர் ரகுராமன் அவர்களும் இந்தக் கன்யா வித்யாலயத்துக்குப் பொருளுதவி எவ்வளவு அவசரமாகத் தேவை என்பதையும், எந்தெந்த விதத்தில் பொது ஜனங்கள் உதவி செய்யலாம் என்பதையும் எடுத்துக் கூறினார்கள்.

“படிப்பதற்குப் பெண்கள் இருக்கிறார்கள். சொல்லிக் கொடுக்க ஆசிரியைகள் இருக்கிறார்கள். ஆனால் போதுமான கட்டட வசதி இல்லை. கட்டடம் கட்டப் பூமி இருக்கிறது. இலக்கணமாகக் கட்டடம் கட்டிக் கொடுக்க ஆட்கள் இருக்கிறார்கள். பணம் மட்டுந்தான் இல்லை. கட்டடம் கட்ட உடனே வேண்டியிருப்பது நாற்பதினாயிரம் ரூபாய்” என்று சொல்லி, அந்தத் தொகை சேர்வதற்கு வழிகளையும் குறிப்பிட்டார்கள்.

நாடெங்கும் பல கல்வி ஸ்தாபனங்களின் உதவிக்காகக் கச்சேரி செய்து கொடுத்து வரும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி இந்தக்

கன்யா வித்யாலயத்துக்கும் உதவிக் கச்சேரி அளிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். ஜூன் மாதம் 10ந் தேதி காஞ்சியில் கச்சேரி நடைபெறும். அந்தக் கச்சேரிக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு உதவலாம்.

நியூ எஷியாடிக் இன்ஷியூரன்ஸ் கம்பெனி மானேஜர் ஸ்ரீ அ. சுப்பையா அவர்கள், மேற்படி வித்யாலயத்தின் மூலமாக இன்ஷியூரன்ஸ் செய்கிறவர்களுடைய கமிஷன் தொகைகளை உதவ முன் வந்திருக்கிறார். அதற்குப் பூர்வாங்கமாக ஸ்ரீமதி மீனாட்சி அவர்களின் கமிஷன் ரூபாய் 250 கொடுத்திருக்கிறார். இந்த முறையிலும் கன்யா வித்யாலயத்துக்கு உதவி செய்யலாம்.

ரொக்க நன்கொடையாகவே கொடுத்து உதவினால் ரொம்ப விசேஷம்.

இவ்வாறு இரண்டு டாக்டர்களும் எடுத்துக் கூறினார்கள். போதிய நிதி இல்லாத படியால் அந்தக் கன்யா வித்தியாலயத்தை நடத்துவதில் நாம் அடையும் இன்னல்களை டாக்டர் ஏகுராமன் உருக்கமாக எடுத்துக் கூறியபோது காஞ்சிபுரத்துக் கல் தூண்களும் கரைந்து விடும் போலத் தோன்றியது.

டாக்டர்களின் வந்தனோபசாரத்துக்குப் பிறகு, பெண் குழந்தைகள் "வாழிய செந்தமிழ்" கீதம் பாடினார்கள். கீதம் முடியும் சமயத்தில் 'டுமீர்' என்ற சத்தம் கேட்கவே அனைவரும் ஆகாசத்தை அண்ணாந்து பார்த்தார்கள். கோயில் விழாவில் விட்ட வாணம் ஒன்று வெடித்து வானத்தில் வர்ண ஜாலங்கள் ஜொலித்தன. காமாட்சி அம்மன் கன்யா வித்யாலயத்துக்கு ஆசி கூறுவதாக எண்ணிக் கொண்டேன்.

இந்தச் சுப சகுனம் காரணமாக, கன்யா வித்யாலயத்தின் பணக்கவலைகள் நீங்கி அந்த ஸ்தாபனம் வருங்காலத்தில் மகோன்னதமடைந்து காஞ்சி மாநகருக்கே பெருமையளித்துக் கொண்டு விளங்கும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. இந்த நம்பிக்கை உறுதிப்படுவதற்கு இன்னொரு முக்கியமான காரணம், "மோட்டார் அண்டு ஜெனரல் டிரேடிங் கம்பெனி" சொந்தக்காரர் ஸ்ரீ டி. எஸ். சுந்தரமய்யர் இந்த அருமையான ஸ்தாபனத்தில் சிரத்தை கொண்டிருக்கிறார் என்பதுதான்.

ஏற்கெனவே, பத்தாயிரம் ரூபாய் வரையில் நன்கொடை அளித்துக் கன்யா வித்யாலயத்தை வளர்த்திருப்பவர், இனி அந்த ஸ்தாபனம் பணமுடையினால் கஷ்டப்படும்படி விட்டு விட மாட்டார் அல்லவா?

வளரும் தமிழ்

சர்தார் படேல்

சர்தார் வல்லபாய் படேல் சிறு பையனாக இருந்தபோது அவருடைய கையில் ஒரு பெரிய சிரங்கு உண்டாயிருந்தது. அதற்கு என்னென்னவோ மருந்து போட்டும் குணமாகவில்லை. கடைசியில், யாரோ ஒருவன் இரும்பைக் காய்ச்சிச் சூடு போட்டால்தான் அது குணமாகும் என்று சொன்னானாம். சர்தார் படேல் பக்கத்துக் கிராமத்திலிருந்த ஒரு கொல்லனுடைய உலைக்களத்துக்குப் போய், தனக்குச் சூடு போடும்படியாகக் கேட்டாராம். கொல்லன் அதற்கு ஒப்புக்கொண்டு இரும்பை எடுத்துத் தீயில் வைத்தானாம். ஆனால், பழுக்கக் காய்ச்சிய இரும்பை எடுத்துக் குழந்தையின் கையில் சூடு போட அவனுக்கு மனமே வரவில்லை. இதைக் கண்ட படேல், "உன்னால் முடியாவிட்டால் நானே போட்டுக் கொள்கிறேன்" என்று தானே சூடு போட்டுக் கொண்டாராம்!

சிறு வயதிலேயே அத்தகைய தீரத்தையும் சகிப்புத் தன்மையையும் காட்டிய ஸ்ரீ வல்லபாய் படேல், பிற்காலத்தில் காந்தி மகானுக்குப் பக்கத்துணையாக நின்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்தியாவுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த சுதந்திர வீரர்களில் ஒருவரானார்.

சர்தார் வல்லபாய் படேலின் வாழ்க்கை வரலாற்றை ஸ்ரீ கே. எஸ். ஜம்புநாதன் தெளிவாகவும் ரசமாகவும் எழுதியிருக்கிறார். சரியான சமயத்தில் சென்னை அல்லயன்ஸ் கம்பெனியார் இந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். விலை ரூபாய் ஒன்று.

தமிழ்த் தொண்டர்

கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகத் தமிழ்நாட்டுக்கு வந்த பல ஐரோப்பியப் பாதிரிமார்கள் தமிழ் மொழியில் உள்ளத்தைப் பறிகொடுத்துத் தமிழுக்கு அருந்தொண்டாற்றியிருக்கிறார்கள். அவர்களில் ரெவரண்ட் பெஸ்கியும் ஒருவர். ரெவரெண்ட் பெஸ்கி, தமிழ்மொழி மீது தமக்குள்ள அளவு கடந்த அபிமானத்தால் தம்முடைய பெயரைக்கூட வீரமாமுனிவர் என்று மாற்றி வைத்துக் கொண்டார். தமிழ் மொழிக்கு முதல் முதலாக ஒரு அகராதியைத் தொகுத்துக் கொடுத்தவர் பெஸ்கி. இதைத் தவிர பல அரிய வசன நூல்களையும் 'தேம்பாவணி' என்னும் ஒரு பெருங் காவியத்தையும் இயற்றியுள்ளார். இத்தாலிய நாட்டில் பிறந்து தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றி விட்டுத் தமிழ் நாட்டிலேயே உயிர் துறந்த அப் பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றை ஸ்ரீ ஜே. ஜி. சுந்தரம் அழகாக எழுதியிருக்கிறார். விலை ரூ. 1—4—0. பிரசுரம்: தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி.

கிடைக்கப் பெற்றோம்

1. கும்பகோணம் ஸ்ரீ வித்யா அச்சகத்தார் பிரசுரித்துள்ள விரோதி வருஷத்துப் பஞ்சாங்கம். விலை அணா 4. விலாசம்: ஸ்ரீ வித்யா பிரஸ், கும்பகோணம்.

2. லலிதா விலாச புத்தகசாலையார் வெளியிட்டிருக்கும் கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கம். விலை அணா 6; விலாசம்: லலிதா விலாச புத்தகசாலை, 107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.



எம். எல். ஏ :—என்னமோ தெரியவில்லை, இரண்டு கைகளையும் உயரத் தூக்கவே முடியவில்லை. எப்படியாவது மார்ச் 31-ந் தேதியாவது தூக்கும்படி இருந்தால் போதும்!

டாக்டர் :—31-ந் தேதி மட்டும் அப்படி என்ன விசேஷம்?

எம். எல். ஏ :—அன்றைக்குத்தான் கட்சித் தலைவர் தேர்தல் நடக்கிறது!

சருமத்தடிப்பு சொஸ்தமாகிறது



"சருமத்தடிப்பு, எக்ஸிமா, முதலிய நோய்களுக்கு நான் சிகிச்சை செய்திருக்கிறேன். ஒவ்வொன்றும் வெல்டர்மாவுக்குப் பணிந்தன."

—N. E. (நர்ஸ்)

வழவழப்பானது, பிசுக்கற்றது

முதல் தடவையாக சருமத்தின் மேல் வல்டெர்மாவைத் தடவியவுடனேயே அதிலிருக்கும் இருவித சக்திகளும் — வேலை செய்வதை நீங்களே **உணர்வீர்கள்.** இந்த இருவித சக்திகளில் ஒவ்வொன்றும் பலவித கொடிய கிருமிகளுக்குச் சத்துரு — அநேகவித சரும வியாதிகளுக்கும் மூலகாரணமாகும் கிருமிகளையும் அடியோடு அழித்து விடுகிறது.

எரிச்சல், வேக்காடு அடங்குகிறது. சருமம் மறுபடியும் சுத்தமாகவும், சுகமாகவும், ஆரோக்ய மடைகிறது. எக்ஸிமா, கொப்புளங்கள், வேக்காடுகள், பருக்கள் மற்றும் சருமத்திற்கு அடியில் ஏற்படும் இதர ரோகங்களெல்லாம் சொஸ்தமாகின்றன.

வேறென்ன இருக்கிறது. கீரில் — எண்ணைச் சேர்க்கை என்னும் புதுமையை அடிப்படையாகக் கொண்டு தயார் செய்யப்பட்ட வெல்டர்மா— நோய்கண்ட சருமத்தினுள்ள விஷத்தை வெளியேற்றுவதோடு மீண்டும் நோய் தொத்திவிடாமல் தடுக்கிறது. சரும வைத்திய நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட்டது. வல்டெர்மா, கறை உண்டாக்காது. பூசின இடத்தில் புலனாகாது. எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உபயோகப் படுத்தலாம்.

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிமிடெட்
பம்பாய் — கல்கத்தா — டில்லி — மதராஸ்



DOUBLE-ANTISEPTIC
Valderma
THE Non-Greasy BALM

V. 3

வேடிக்கை மனிதர்

விந்தன்

சூரூர் கருப்பையா அன்றும் வழக்கம் போல் சர்க்காரைத் திட்டிக்கொண்டே படுக்கையை விட்டு எழுந்தார். "என்ன சர்க்கார் வேண்டிக் கிடக்கிறது! சுதந்திர சர்க்காராம், சுதந்திர சர்க்கார்! தேசம் சுதந்திரம் அடைந்துவிட்டால் மட்டும் போதுமா? தூங்குவதற்குச் சுதந்திரம் வேண்டாமோ? இத்தனை மணிக்குத்தான் கடையைத் திறக்க வேண்டும், இத்தனை மணிக்குத்தான் கடையை மூட வேண்டும், இன்ன கிழமைதான் கடைக்கு வார விடுமுறை விடவேண்டும்—இதெல்லாம் என்ன இ

கோபாலசாமி அங்கே நின்று கொண்டிருந்தான்.

"ஏன் ஐயா, இப்படிக் கூனிக் குறுகிக் கொண்டு நிற்கிறீர்? என்னிடம் நீர் பிச்சை கேட்கவா வந்திருக்கிறீர்? வேலை செய்து பிழைக்கத்தானே வந்திருக்கிறீர்? நீர் உம்ம வீட்டு வேலையைச் செய்தால், நான் எங்க வீட்டு காசைக் கொடுக்கப் போகிறேன்; இவ்வளவுதானே விஷயம்?" என்று கருப்பையா அவன் கொஞ்சமும்

பட்டத்தோடு விலகினான். அந்தப் பட்டத்தை அவனுக்கு அளித்தவர் கரூர் கருப்பையாதான்!

புத்தக ஞானத்தைக் கொண்டு 'சத்திய கீர்த்தி'யாக வாழ விரும்பியவன் சாமிக் கண்ணு. அனுபவ ஞானம் அதற்கு நேர் விரோதமாயிருந்ததைக் கண்டதும் அவனுடைய மூளை குழம்பிற்று. அந்த மட்டும் அவன் தனக்குப் பைத்தியம் பிடிப்பதற்குள் ஒருவாறு சமாளித்துக் கொண்டுவிட்டான். அவ்வாறு சமாளித்துக் கொள்வதற்குக் காரணமாயிருந்தது அவனுடைய பசிதான்;—பசியென்றால் வயிற்றுப் பசி!

இந்தப் பசியின் காரணமாக அவன் கருப்பையாவின் காரியங்கள் தனக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி—அவருடன் ஓரளவு ஒத்துழைத்து வந்தான். இருந்தாலும் 'மனச்சாட்சி' என்று ஒன்று இருக்கிறதே, அது அடிக்கடி அவனை உறுத்தி வந்தது. தக்க சந்தர்ப்பம் வாய்த்ததும்—அதாவது, வயிற்றுக் கவலையைத் தீர்த்துக் கொள்ள வேறு வழி பிறந்ததும்—அவன் கருப்பையாவின் கடையிலிருந்து விலகிக் கொண்டு விடுவதென்ற தீர்மானத்துக்கு வந்தான்.

தன்னுடைய முடிவை அவன் கருப்பையாவிடம் தெரிவித்தபோது, அவர் காரணம் என்னவென்று கேட்டார். அப்போதும் அவன் உண்மையை மறைக்க விரும்பவில்லை. "தங்களுடைய காரியங்களில் ஒத்துழைக்க என் 'மனச்சாட்சி இடந் தரவில்லை" என்றே சொல்லிவிட்டான்.

இதைக் கேட்டதும் கருப்பையாவுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. "அடடே! உமக்கு மனச் சாட்சி வேறே இருக்கிறதா! இந்த விஷயம் எனக்கு முதலிலேயே தெரிந்திருந்தால் உம்மை வேலையிலேயே வைத்துக் கொண்டிருக்க மாட்டேனே!" என்றார்.

"எனக்கும் தங்களுக்கு மனச் சாட்சி இல்லை என்ற விஷயம் முதலிலேயே தெரிந்திருந்தால், நான் தங்களிடம் வேலை பார்க்கவே வந்திருக்க மாட்டேனே!" என்றான் சாமிக்கண்ணு.

அன்றைய தினத்திலிருந்து சாமிக்கண்ணுவைக் குறிப்பிடும்போதெல்லாம் கருப்பையா 'சத்தியகீர்த்தி சாமிக் கண்ணு' என்றே குறிப்பிடுவது வழக்கம்.



அவன் விலகுவதற்கு நாலு நாட்கள் இருக்கும்போதுதான் கோபாலசாமி அவனுக்குப் பதிலாக வந்து சேர்ந்தான். அந்த நாலு நாட்களில் அவன் எவ்வளவோ விஷயங்கள் தெரிந்து கொண்டிருந்தான். எனினும் கடையைத் திறக்கச் செல்லும்போது நூறு ரூபாய்ப் பணத்தை எதற்காக எடுத்துச் செல்ல வேண்டும் என்ற விஷயம் மட்டும் அவனுக்குத் தெரியவில்லை. ஆகவே, அவன் விழித்தது விழித்தபடி நின்றான்; நின்றது நின்றபடி யோசித்தான்.

கருப்பையா பொறுமை யிழந்து, "என்ன முழிக்கிறீர்? கடிகாரம் உமக்காக ஓடாமல் இருக்குமா, என்ன?" என்றார்.

கோபாலசாமிக்கு அப்பொழுதுதான் கொஞ்சம் விஷயம் புரிந்தது. "யாராவது இந்த உபரி தானியங்களை வாங்காமல் விட்டு விட்டால்......" என்று ஆரம்பித்தான்.

"யாராவது என்ன? நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் 'வேண்டாம்' என்றுதான் சொல்வார்கள். தண்ணீரில் வேகும் சோற்றுக்கே அவர்கள் தவியாய்த் தவிக்கும் போது எண்ணெயில் வேகும் பூரிக்கு எங்கே போவார்கள்?—அவர்களுக்கெல்லாம் நீர் உபரி தானியம் கொடுத்த மாதிரி கணக்கு எழுத வேண்டும்; அவ்வாறு எழுதும்போது, நீர் அந்தத் தானியத்துக்குரிய காசைக் கல்லாவில் போட வேண்டாமா? அதற்காகத்தான் இந்த நூறு ரூபாய்க் காசு......!"

"இப்பொழுது தெரிகிறது......"

"என்னத்தைத் தெரிகிறது? சரியாய்த் தெரிந்துகொள்ளும், ஐயா! சிலர் ஞாயிற்றுக் கிழமை வாங்க வேண்டிய அரிசியை அடுத்த சனிக்கிழமை வரை வாங்காமல் இருந்து விடுவார்கள். அந்தக் 'கூபன்'களுக்குரியவர்களெல்லாம் அரிசி வாங்கிக்கொண்டு விட்டதுபோல் நீர் சனிக்கிழமையன்றே 'பில்' எழுதிக் கிழித்து எறிந்துவிட வேண்டும். மறுநாள் அவர்கள் வந்து என்னதான் பல்லைக் காட்டினாலும் 'கெடு காலாவதியாகிவிட்டது' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட வேண்டும்."

"தெரிகிறது............ஒரு சந்தேகம்..."

"என்ன சந்தேகம்......?"



"உபரி தானியத்துக்கும் சேர்த்து 'பில்' போட்டுவிட்டு, அரிசிக்கு மட்டும் காசு வாங்கினால் சந்தேகப்பட மாட்டார்களா?"

"ஆளைப் பார்த்து 'பில்' போடுமே, ஐயா! பார்க்கும்போதே 'இது படிக்கத் தெரிந்த மூஞ்சி, இது படிக்கத் தெரியாத மூஞ்சி' என்று தெரியாதா?"

"சரி."

"'சரி' என்று சொல்லிவிட்டுப் போய் மக்காச் சோளம், புழுத்துப்போன ரவை இவற்றையெல்லாம் சேமித்து வைக்காதீர்! நம்முடைய ஹோட்டல்காரர்களுக்கு உதவாதவற்றையெல்லாம் 'கூபன்'காரர்களுடைய தலையிலேயே கட்டப் பாரும். அவற்றை வாங்கினால்தான் அரிசி போடுவேன் என்று கண்டிப்பாகச் சொல்லும்!"

"சொல்கிறேன்......"

"என்னிடம் சொல்வதுபோல் இழுத்துப் பறித்துக்கொண்டு சொல்லாதீர்; நன்றாய் அடித்துச் சொல்லும். நம்முடைய முறைப்படி சேகரிக்கும் அரிசி, கோதுமை ஆகியவற்றை 'நம்முடைய லிஸ்'ட்படி நம் வாடிக்கைக்காரர்களுக்கு அவ்வப்போது தள்ளிவிடும். அவர்கள் கொடுக்கும் காசை வாங்கிக் கல்லாவில் போட்டுவிடாதீர்; அடுத்தாற்போல் இருக்கும் நம் மளிகைக் கடை குமாஸ்தாவிடம் கொடுத்து வையும். என்ன, தெரிகிறதா?"

"தெரிகிறது, தெரிகிறது!"

"இந்த சர்க்கார் பயல்கள் வந்து, 'தாம், தூம்' என்பான்கள்! 'கணக்குப் புத்தகத்தை எடு, கல்லாவை விட்டு எழுந்திரு, அரிசியை அளந்து காட்டு' என்றெல்லாம் குதிப்பான்கள். நீர் எதற்கும் மிரண்டு விடாதீர்!—ஒரு புன்சிரிப்பை அலட்சியமாக வீசி அவர்களை உட்கார வையும். உடனே பையனை ஹோட்டலுக்கு அனுப்பும். அந்தப் பயல்கள் நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பான்கள். நீர்பாட்டுக்கு உம் வேலையைத் தொடர்ந்து நடத்தும்!"

இந்தச் சமயத்தில் கோபாலசாமியின் முகத்தில் ஒரு புன்னகை அரும்பி மறைந்தது. அந்தப் புன்னகையைக் கண்ட கறுப்பையா, "ஹா, இப்பொழுது சிரித்தீரே—இந்தச் சிரிப்பு போதும், அந்தப் பயல்களை உட்கார வைப்பதற்கு!" என்று துள்ளிக் குதித்துக் கொண்டே சொன்னார்.

கோபாலசாமி நூறு ரூபாய்ப் பணத்தை எடுத்துத் தன்னுடைய சட்டைப் பையில் வைத்துக் கொண்டான். "பத்திரம்!" என்று எச்சரித்துக்கொண்டே, கறுப்பையா சாவிக் கொத்தை அவனிடம் கொடுத்தார்.

கோபாலசாமி புறப்பட்டான்.

3

சீரூர் கறுப்பையா தம்முடைய காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு

புறப்பட்டபோது, யாரோ ஓர் ஆள் ஓடோடி யும் வந்து, "கல்லமுத்து போயிட்டாருங்க!" என்றான்.

இந்தத் துக்கச் செய்தி கறுப்பையாவைத் தூக்கிவாரிப் போட்டது. கல்லமுத்து [redacted]

"கல்லமுத்துவைப் பற்றி உமக்கு ஏதாவது தெரிந்தால் பேசும்; தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இரும்!" என்று அந்த மனிதரை நோக்கிச் சீறினார் கறுப்பையா.

[redacted]

கல்கி



KALKI மார்ச் 27, 1949

4 அணா

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, ராயப்பேட்டை
மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர், ராயபுரம்

•

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன

•

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிசர்வ் நிதி	ரூ. 62,00,000

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

என். கோபால அய்யர், *செக்ரடரி*



தி இந்தியன் பாங்க் லிட்.

ஆஸ்துமா, மார்ச்சளி இருமல், மூச்சுத் திணறல், 3 நிமிஷங்களில் ஒழிக்கப்படுகின்றன

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதிப்படுகிறீர்களா? அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா? பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், குளுமையான வஸ்துக்களையும் உணவுகளையும் சாப்பிட முடியவில்லையா?

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கை அளிக்கும். மயக்க மருந்துகளில்லை, புகை பிடித்தலில்லை, இஞ்சக்ஷனில்லை, ஆட்டோமைஸர் தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின் போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக மறைந்து விடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி, கபத்தைக் கரைத்து சிரமமின்றி ஸ்வாசத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவே நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 வருஷங்களாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து, ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக ஜே. ரிச்சர்ட்ஸ், ஹாமில்டன், ஒன்ட்., கானடா, இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து, இறந்து விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அவ்வுபாதையே மீண்டும் ஏற்பட்டதில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ (Mendaco) முதல் வேளை சாப்பிட்டதுமே நேரடியாக ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ (Mendaco) அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்தரவாதத்தின் கீழ் மெண்டாகோ (Mendaco) உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டபின் பூரண குணம் பெற்று, திருப்தியளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத் தொகையும் வாபஸ் செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரிகளிடமிருந்து மெண்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள். மறுநாள் காலை எவ்விதமான தெம்புணர்ச்சி ஏற்படுகிற தென்பதையும் பாருங்கள். உத்தரவாதம் உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது.

Mendaco

மெண்டாகோ

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ ஹே ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

REGD. No. M. 4392



S. 100-172 TM